சிவமயம்

குமரகுருபரன்



மலர் 13] சுபகிருது-௵ ஆனி-௴ 1ம்-௳ (15-6-62) [இதழ் 6

தனிப் பிரதி 13 நயா பைசா வருடச் சந்தா ரூ. 1½

ஆசிரியர் குழு

1. வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்கள்,
ஸ்ரீ காசிமடம் இளவரசு, திருப்பனந்தாள்.

2. திரு. கே. சிவராமன் அவர்கள் M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்,
காசிச் சர்வகலாசாலை, .காசி.

3. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A. B. O. L.,
பிரின்ஸிபால், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

4. ராவ்சாஹிப், வித்துவான். திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள், தலைமைத் தமிழ் விரிவுரையாளர், ம. தி. தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி.

5. திரு. ஆ. சி. ஷண்முகநயினர் பிள்ளை அவர்கள் B. A., B. L.,
வழக்கறிஞர், தென்காசி.

6. திரு. டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் B. A., B. L
(Verification Officer) இந்து அறநிலைய இலாகா,
20, நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை – 6.

7. திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A.
தமிழ் விரிவுரையாளர், காசி இந்துப் பல்கலைக்கழகம், காசி.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 13	சுபகிருது௵ ஆனித் திங்கள் 1-ம்௳ [15-6-62]	இதழ் 6

சிதம்பரச் செய்யுட் கோவை

மாணிக்கவாசக அடிகள்

[கட்டுரை 58]

திருமாலும் பிரமதேவனும் ஒவ்வொரு கற்பத்திலும் தொலைதல் உண்டு என்பது முன்னோர் கொள்கை. அதன் உண்மையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் அன்று. அது குறித்த ஆராய்ச்சி பிறிதொரு கட்டுரையாகத் தனியிடம் பெறும். அதில் விளக்கம் உற எழுதப்படும். நம் முதாதையர் பலரும் மேதாமணிகள் என்பதை உளம் கொண்டு கற்பதே நமக்கு நலம் பயக்கும். 'நாமே பகுத்தறிவுடையேம். நம் முன்னோர் முடர்; ஆராய்ச்சியில்லாதவர்' என்று கொண்டு மடமை என்னும் பெருந்தடங்கடலின் அடியில் அழுந்தி, அறிவு

தோன்றிய பரம்பரையில் வந்தனர் அல்லர் என அறிஞர் அகத்துட்கொள்ள மட்பொறையாகத்திரிவார் பற்பலர் இக்காலத்துளர். அவர்க்கு இக்கட்டுரை எழுதப்பட்டிலது.

"நூறு கோடி பிரமர்கள் நுங்கினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர்
ஈறிலாதவன் ஈசன் ஒருவனே"

எனத் திருநாவுக்கரசு நாயனுர் அருளினர்.

காஞ்சிப்புராணத்தில் திருநெறிக்காரைக் காட்டுப் படலத்தின் பொருளால் இந்திரர் பலர் என்னும் உண்மைவெளிப்படும். அதில் அரியயன் இருவர் பன்மையும் புலப்படுகின்றது. சைவ நூல்களுள், சிவபரத்துவம் உணர்த்துவது தலையாய கடமை ஆகும் அவற்றின் ஆசிரியர்க்கு. இன்றேல், சிவ பத்தி தோன்ருது. தோன்றினும் நிலையாது. பல சமயங்களையும் தழுவும் பெற்றியோர் பைத்தியக்காரரேயாவர். ஒரு நெறியின்றி விரவிய பொருளாவரே அன்றி ஒரு நெறியொழுகியுண்மைக்கதி அடையும் உத்தமர் ஆகமாட்டார். சமரசஞானிகள் என்று சொல்லிக் கொள்ளும் அஞ்ஞானிகளொடு கலந்து பழகினுல் அவர் தம் அஞ்ஞானம் வெள்ளிடை விலங்கலாம்.

ஆசிரியர் குமரகுருபர முனிவர், திருமால் பிரமன் முதலோர் வாழ்நாள் முடிந்தாலும் முடிவுபெருது என்றும் இளையராயிருந்து மன்றிலாடும் மணி திருநடனத்தைக் கண்டு மெய்யின்புறும் மாண்புணர்த்தும் வகையில்,

"மல்லாண்ட திரடிண்டோட் டுழாய்முதலு மணிநாவிற்
சொல்லாண்ட மறைமுதலும் பலராங்குத் தொலைவெய்தப்
பால்லாண்டு செலச்செல்லா வினையோரும் பனிப்பெய்த
அல்லாண்ட நள்ளிருளி லழலாடுந் தொழிலினையே."

என்று ஒரு தரவு அருளினர். அவர் தரலால் அது தரவு ஆயிற்று. நாம் பெறலால் நமக்கு அதுவே பேறும் ஆயிற்று.

அழல்-நெருப்பு, தீயாடி, என்னும் பெயர் தெரிந்ததே. 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்' என்பது பலர்க்கும் தெரிந்த ஒரு திருவாசகம். 'நள்ளிருள்' என்பது அண்டத்தே சர்வசங்காரகாலத்து மஹாந்தகாரம். பிண்டத்தே உயிர்களை மறைக்கும் ஆரைவாந்தகாரம் (கேவலாவத்தை) காரண கேவலம், காரிய கேவலம் எல்லாம் நள்ளிருளே.

'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்' என்ற உண்மையை யும் இங்கு நினைத்தல் வேண்டும். 'இருள் அடராது உள்ளுயிர்க்கு உயிராய்த் தெளிக்கும் அறிவு திகழ்ந்துளது' என்பதே அதன் உண்மைக் கருத்து. அங்கு அவ்வறிவு திகழாதேல் உயிர்க்கு ஐந்தொழில் நிகழாது. 'திரிமலத்தே குளிக்கும் உயிர், அருள் கூடும் படியே' ஐந்தொழில் நிகழ்ச்சியும் பயனும் ஆகும். இவ்வளவு எழுதியும் விளங்கும் அளவு எவ்வளவோ?

'திகழ்ந்து என்றதற்குச் 'செறிந்து' என்ற பாடமும் உண்டு. அது சாலப் பொருத்தம் உடைய பாடம் ஆகும். செறிவு இறை நிலையைக் குறித்தது, திகழ்வு உயிரறிவை நோக்கியது. அதனால் இரண்டு பாடமும் பொருந்தலாயிற்று.

'இளையோர்' என்றது சநகாதி முனிவரை என்று தமிழ்த் தெய்வத்தின் குறிப்பு. சிவபெருமானுக்குரிய 'கணாதியர்கள்' என்று குழறிய உரையும் உண்டு.

மாலும் அயனும் இந்திரனும் பற்பலர் தொலைவெய்திய காலப்பன்மையும் என்றும் இளையரது காலப் பன்மையும் ஆடுந் தொழிலின் முடிவின்மையையும் இளைப்பின்மையையும் உணர்த்தி நின்றன.

பல பெரிய ஊழிக்காலம் கழிந்தாலும் உடையாய்! உனக்குச் சிறிதும் பொழுது கழிந்ததன்று. காலாதீதனாகிய உனக்குக் காலவரம்பு ஏது! உனக்குக் காலவரையறையில்லாத வாறே உன் திருக்கூத்திற்கும் காலவரம்பு இல்லை என்ற படியாம்.

எண்ணில்லாத காலம் உடம்பு எடுத்தும் விடுத்தும் பிறப் பிறப்பிற் சுழன்றலையும் என் தளர்வை நீ சிறிதும் எண்ணினை யல்லை. எண்ணுவையேல், எனக்கு அருளாமல் இராய். ஏன்? நின் ஆடலின் முடிந்த கருத்து. எடுத்த திருவடி உயிர்களை ஆட் கொள்ள எடுத்ததே ஆகும். ஆதலின் ஆட்டம் அருள்நலம் பழுத்த ஆட்டமே. ‘ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே’ என்பது தமிழ்மறை.

‘பல்பேருழி செல்லினும் அடிகட்கு
ஒல்லையும் செல்லா தாகும், ஆகலின்
அளவில் காலம் அலக்கண் உற்று உழலும்என்
தளர்வு நோக்காய் போலும் நோக்கின்
கருணைசெய் தருளாய் அல்லை
அருள்நலம் பழுத்த ஆடல்வல் லோயே.

குறிப்பு :- மல்-வலிமை, துழாய் முதல், மறைமுதல், ஆகிய இருமுதல் உயிர்க்கு வேண்டும் இருமுதலே. வேண்டாத இரு முதலன்று. தொலைவு-காலத்தாற் கழிவு படாது என்றும் நிலைத் தலிற்றேல்வியுறல். பனிப்பு-நடுக்கம். அல்-இரா. அடிகள்-கடவுள், திருக்கூத்தாடும் திருவடிகளுமாம். ஒல்லையும்-சிறிது பொழுதும். அலக்கண்-துன்பம். (அலங்குகண் என்ற தன்மருஉ. இடுங்குகண் இடுக்கண் என்றாற் போலும் மருஉ.)

———

(வளரும்)

திருக்கோவையார் புதிய பதிப்பு

★

(பேராசிரியர் உரையும் பழைய உரையும் கூடியது)
784 பக்கம் வெள்ளைத்தாள். அடக்கவிலை
தனிப்பிரதி விலை ரூ. 2-90
(தபால் கட்டணம் வேறு)
ஒரே சமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் பெறுவோருக்கு
20% கழிவு உண்டு

அசோகனின் லட்சியம்

திரு. அ. சுவாமிநாதன் அவர்கள்
தமிழாக்கம்

இந்தியாவையாண்ட இந்துப் பேரரசர்களுள் அசோக மன்னன் தலைசிறந்தவன்; பாரத நாட்டின் பெரும் பகுதியையும் அவன் ஆண்டான். பௌத்த மதத்தை நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் பரப்பினான். ஆட்சிக்கு வந்த ஆரம்ப காலத்தி லேயே அவன் கலிங்கநாட்டின்மீது போர்தொடுத்தான். அந்தப் போரில்கண்ட துன்பக்காட்சிகளும், பயங்கர நிகழ்ச்சிகளும், அவனைப் போரையே வெறுக்கும்படிச் செய்தன. கலிங்கப் போர் முடிவிலேயே, அவன், போர் செய்யக்கூடாது என்ற விரதம் பூண்டான். ஒரு நாட்டையாளும் மன்னனின் பெரிய கடமை, வெற்றிக் கொடி நாட்டுவதும், நாட்டைப் பெருக்கு வதும் அல்ல. தன் குடிமக்களுக்கு அமைதியையும், சுக வாழ்வையும் உண்டு பண்ணுவதுதான் என்று அசோகன் எங்கும் பறை சாற்றினான்.

இளமைக் காலத்திலேயே அசோகன் மனமானது, அவனது அரசவை குருமார்களால் அவனது திறமைமிக்க தந்தை, இன்னும் திறமைவாய்ந்த பாட்டனார் இவர்களது வீரப்பிரதாபச் செயல்கள் நிறைந்த கதைகளால் போராசை என்னும் நெருப் பால் கொளுத்துண்டு சுடரலாயிற்று. ஒவ்வொரு நாளும் பாடம் முடிந்தவுடனேயே அசோகன், தன் குருவை நோக்கி "குருவே! இன்றைக்கு என் படிப்பு நன்றாயுள்ளதா" என்று கேட்பான். பேரறிவு படைத்த தொண்டு கிழவரான அக்குருவானவர் தமது நரைத்த மயிருடன் கூனிக்கொண்டே "இளவரசே! நேற்றைக்குக் காட்டிலும் நன்றாகப் படித்துள்ளாய். ஆனால் நாளைக்கு நோக்க உன் இன்றைய படிப்பு அவ்வளவு நல்ல தல்ல" என்று சாதுரியமாகப் பதில் கூறுவார்.

உடனே அசோகன் மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டே "அப்படியானல் குருவே! எனக்கு ஒரு கதை சொல்லுங்கள் கேட்கிறேன்" என்பான்.

"வாலுடன் ஓடிப்போன ஒரு பூனைக்குட்டிக் கதை சொல்லட்டுமா?" என்று வயதான குரு கேட்பார்.

"வேண்டாம் குருவே! வேண்டாம்!" என்று உடனே அசோகன் பதில் வரும்.

"ஆ அப்படியா!" என்று ஆச்சரியமுடன் குருவானவர், "இளவரசே! மயிரடர்ந்த ஒரு சின்ன ஆட்டுக்குட்டி தனது தாயை இழந்துவிட்ட கதையைக் கேட்க விருப்பமா?" என்பார்.

"ஐயோ! இதெல்லாம் வேண்டவே வேண்டாம். குருவே!" என்று உரக்க இளவரசன் அசோகன் கத்துவான்.

"ஏன் இளவரசே! அப்படியானல் உன்னைப் போன்ற ஒரு பையன் சிறுசிறு பொம்மைகளுடன் விளையாடிய வேடிக்கையான கதை சொல்லட்டுமா"

"நல்லதுதான் ஆனல் எனக்குத் தேவையில்லை" என்று பதில் கூறும் அசோகன் இடிபோல் வெடிச் சிரிப்புச் செய்வான். "குருவே! கதை யென்ருல், அது போர்களைப்பற்றியும், பூசல்களைப்பற்றியும், கத்திகளைப்பற்றியும், கேடயங்களைப்பற்றியும், குதிரைகள், யானைகள் பற்றியும், என் தந்தை, பாட்டனுர், இவர்கள் வீரச் செயல்கள் பற்றியும் அன்ருே இருத்தல் வேண்டும்? மருண்டு கத்திக்கொண்டே ஓடும் செம்மறி ஆட்டுக் கூட்டம்போல் எப்படிக் கிரேக்க நாட்டுக் கூட்டத்தை என் முன்னேர்கள் இந்நாட்டைவிட்டுத் துரத்தினுர்கள் என்றும் அக்கதை கூறல் வேண்டும்".

இதன்பிறகு, குருவானவர் மகிழ்ச்சியை வருவித்துக் கொண்டு கவலையான முகம்மட்டும் மாருமல் "அசோகா என்ன; இது? எப்போது பார்த்தாலும் போர்கள் – போர்கள் – போர்கள் என்று முழங்குகிருயே" என்று பதில் கூறுவார்.

“ஆமாம். அப்படித்தான் அது.” என்று குருவின் பாதங்களுக்கருகில் சௌகரியமாய் உட்கார்ந்துகொண்டே அசோகன் பதில் சொல்வான். “அரச குலத்தார் என்ருல் அவர்கட்கு வேண்டுவது எல்லாம் போர்களும், முடிவில் வாகைகளுந்தான். குருவே! நான் அரசனுகும் வரை கொஞ்சம் பொறுங்கள். அந்தக் கிரேக்கர்களை இந்த உலகத்தின் ஓரத்திற்கே ஓடும்படி செய்துவிடுகிறேன். இன்னும் அதற்கு மேலும் பிடரைப் பிடித்துத் தள்ளுவேன்”.

இதன்பிறகு, குரு இளவரசனுக்கு அவனது முன்னேர்களின் ஆச்சரியகரமான வீரச்செயல்கள்பற்றி விரித்துச் சொல்வார். எப்படியெப்படியெல்லாம் கிரேக்கர்களுடன் போராடிக் கடைசியில் அவர்கள் புறமுதுகிடும்படி செய்தனர் என்றும், எப்படியெல்லாம் அவன் தந்தையார் கடைசிமட்டும் போர்புரிந்துகொண்டேயிருந்தார் என்றும், எட்டினமட்டும் விரட்டியடித்தாரென்றும், அசோகன் பிறக்கும்வரை போரை இடைவிடாமல் புரிந்தாரென்றும், அப்போது அவர் ஆண்ட சாம்ராஜ்யம் போல் பெரியதும், செல்வமிக்கதும், வல்லமை கொண்டதுமான வேருென்று இந்த உலகிலேயே இருந்ததில்லை என்றும் விளங்கக் கூறுவார்.

இம்மாதிரியான கதை சொல்லி முடிந்தவுடன், அசோகன் நிமிர்ந்து நின்றுகொண்டு, ஒளிவீசும் கண்களுடன், உரத்த குரலில் “குருவே! என்ருே ஓர் நாள் இந்த உலகத்தையே என் வசமாக்கி அரசாள்வேன்” என்பான்.

குரு, கதை சொன்னுலுங்கூட இடையிடையே கூறும் அறிவுரைகள்; “இளவரசே! வெற்றி காண்பதற்கு முன்பு சண்டையில் அறிய வேண்டியன நிரம்ப உள்ளன. சண்டையென்ருல் உயிர்க்கொலைகள் – ரத்தக்களறிகள் – ஆற்றுெணுத் துயரங்கள் – வருத்தமும், உறுபசியும் – தனிமையும், துன்பமும் - நள்ளிருளில் காயமுற்ருேர் இடும் கூக்குரல்கள் – சம்சார பந்தம் நீங்கித் திக்கற்றுத் திகைக்கும் விதவைகள் – அவர்கள் இளங் குழந்தைகள் – அம்மம்ம!”

இதற்கெல்லாம் சட்டென்று அசோகன் ஒரு நொடியில் பதில் சொல்வான். "ஆமாம். ஆமாம். குருவே! எனக்குத்தெரி எனக்குத் தெரியும்–" உண்மையிலேயே அவனுக்கு ஒன்றும் தெரிந்தபாடில்லே.

அசோகனுக்கு இருபத்தொரு வயதாயிருக்கும் போது அவன் அருமைத் தந்தையார் இறந்துவிட்டார். இதனுல் பெரிய சாம்ராஜ்யத்தை ஆளவேண்டிய பொறுப்பு அசோகனைச் சார்ந்தது. அவன் மனம், பெருமையும், மகிழ்ச்சியும் சேர்ந்து விம்மிதமுற்றது. இதுவரை அவன் எதிர்பார்த்திருந்ததெல்லாம் இந்த அரசாளும் சந்தர்ப்பத்தைத்தான்; கனவு கண்டதெல்லாம் இதற்காகத்தான்; காத்திருந்ததும் இதற்காகத்தான்; எண்ணியது நடந்துவிட்டது. பெருமையும், ஆற்றலும் படைத்தவனுயிருப்பதால், அவன் கொண்ட மற்றக் கனவுகள் இனி நனவாகிவிடும். இதன்பொருட்டு அசோகன் ஒருபெரும் படையைத் திரட்டினுன். வானிடையே விண்மீன்கள் போலவும், உலகின்கண்ணுள்ள கடற்கரை யோரங்களில் காணப்படும் எண்ணிறந்த கூழாங்கற்கள் குவியல்கள் போலவும், அவ்வீரர் பெரும்படை காட்சி தந்தது. வரிசை, வரிசையாகக் காலாட்படைவீரர்கள் சென்றனர். உலக மக்களே ஒருங்கு திரண்டாற்போல, மன்னன் பின்னர் அவ்வளவு போர்வீரர்கள் பின்தொடர்ந்தனர். குதிரைப் படை வீரர்கள் மகிழ்ச்சியுடனும், ஆற்றலுடனும் தங்கள் தங்கள் கொடி, வாள், கேடயம் இவற்றுடன் விரைவாய்ச் சவாரிசெய்து சென்றதானது கண்ணுக்கு, எப்போதும் செல்வதுபோல் காட்சி கொடுத்தது. இன்னும் பெரும் பெரும் யானைக் கூட்டங்கள் இடிபோலப் பிளிறிக்கொண்டு சென்ற காட்சி, ஒரு இருங்கடல் கொந்தளிப்பதுபோல இருந்தது. கொடிகள் காற்றில் அசைந்தாடின. முரசங்கள், பொருளற்ற ஒலிக்குறிப்பில் முழங்கின. இசைக்கருவிகள், போரைப்பற்றிய பரணிகள் பாடின.

இவ்வளவு படைகள் சூழ அசோக மன்னன், எதிரிகள் இருப்பிடமான கலிங்க நாட்டை வந்தடைந்தான்.

வைகறையில் பனிபெய்யும் சமயத்தில் போர் துவங்கியது. கதிரவன், உச்சிக்கு வந்த சமயம் பனியெல்லாம் தரையோடு படிந்து மங்கியது. போர் மும்மரமாய் நடைபெறுகிறது.

அசோகன், போரின் ஆரம்ப நாளிலேயே மறக்கொணு சம்பவங்கள் நடைபெறக் கண்டான். குருதியும், மாசும்படிந்து வெம்மையால் கொதிப்புண்டு கூச்சலிடும் ஒலியும், பலரின் சாபமும், ஆற்ருெணுத் துயரமுங் கலந்ததோர் கனவுலகில் அவன் தென்பட்டான். கைச்சண்டையும், குதிரைச்சண்டையும், விண்ணே அதிரும்படி பிளிறும் யானைச் சண்டையும், நடுங்கச் செய்யும் போரிசைக் கருவிகள் ஒலியும், அசோகன் போர்ச் சமயம் கண்ட கனவுப் பகுதிகளாம். நாளெல்லாம் மன்னனின் வாள் சுழற்சியிலேயே இருந்தது. ஓய்வில்லை. மின்போல் ஒளி விடும் வாளின் முழுப்பாகமும், மாற்ருரின் குருதியில் மூழ்கும் வரை போராடினுன்.

ஆனுல் அத்தமிக்கும் தருவாயில், எதிரிகள் யாவரும் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தனர். பயத்தால் மயக் குண்டு ஒவ்வொருவரும் செல்லுமிடம் யாதென்று கருதாமலேயே உயிர்பிழைக்க ஓடினர். அடிபட்டோரும், உயிர்போகும் தருவாயிலுள்ள வீரர்களும் கைவிடப்பட்டனர். தலை பிழைத்தால் போதும் என நினைத்த ஏனையோர் கையிலுள்ள ஆயுதங்களை விட்டெறிந்து, போரையே மறந்து, நாட்டையுந் துறந்து கண்ணீர் வடித்த வண்ணமாய் மூச்சுத்திணர ஓடி ஒளிந்தனர். அப்படிச்சென்ற அவர்களை விரட்டியடித்த வண்ணமாய்ப் பின் தொடர்ந்தன அசோகனின் படைகள். நள்ளிருளில் பயத்தாலும், காயத்தாலும், அல்லல்பட்டு உயிரோடு போராடும் வீரர்களின் அழுகைக் குரலும், அவல ஒலிப்பும், வருத்தமிக்க வேதனைச் சூழலை எழுப்பி நின்றன.

ஆனுல் அசோகன் பின் தொடரவில்லை. போர்க்களத்தி லேயே தனது குதிரையை நிறுத்திவிட்டு அதனருகில் மௌன முடன் அமர்ந்திருந்தான். மன்னனின் ஆலோசர்களும், மந்திரி களும், தந்திரிகளும், மற்றுமுள்ளப் பிரதானிகளும், சற்று தூரத்திலேயே இருந்துகொண்டு அவன் மௌன விநோதத்தை நோக்கி வியப்படைந்தனர்.

இருள் நீங்கியது. விண்மீன்களும், வெண்ணிலவும் மறைந் தன. இரவெல்லாம் போரை நினைவூட்டியெழுந்த பெருங்காற்றும் அமைதியில் ஆழ்ந்தது.

போர்க்களத்தில் குருதிச்சேற்றில் சிக்குண்டு கிடந்த வீரர்களின் நெஞ்சில் பாய்ந்துள்ள அம்பும், வாளும், அவர்களுடைய வேதனையை மிகுதிப்படுத்திப் பயங்கரக் காட்சியைத் தோற்றுவித்தன.

இந்தச் சமயத்தில் வெகுதூரத்தில் நரிகளின் ஊளையும், பல்லைக் காட்டி எழுப்பும் கோர ஒலியும் மிகுதியாயின. அவைகள் பிணங்களின் நடுவே உணவு பெற மும்மரமாய்ப் போட்டியிட்டன. உயிரோடு மன்றுடிக்கொண்டிருக்கும் சிலரின் ஆவிகள் திக்கற்றுத் திண்டாடி நின்றன.

ஒய்ந்து நிற்கும் குதிரைக்குப் பக்கத்திலேயே இன்னும் அசோகன் அமைதியுடன் விற்றிருந்தான். அவன் மிகக் களைப் படைந்திருந்தான். தந்தையார், பாட்டனுர் இவர்களெல்லாம் காணுத வெற்றியை இவன் கலிங்கப்போரில் கண்டான். அவனது மனம் பனிக்கட்டியாய் உறைந்துகிடந்தது. வேதனை சூழ்ந்து நின்றது. அந்த வேதனை போர்க்காய வேதனையல்ல. பயனற்ற தன் கனவைப் பற்றிய வேதனைதான் அது.

இது சமயம் அவன் தலைகுனிந்த வண்ணமாய், வருத்தமுடன் தன் குதிரை மீதேறி அவனுக்கென அமைக்கப்பட்ட அரச கூடாரம் நோக்கிச் சென்முன்.

காலை வேளையிலேயே மந்திரி, பிரதானிகளை வரவழைத்தான். அவர்கள், வெற்றிக் களிப்பினுல் யாதுமறியாது பள்ளிச் சிருர்கள் விளையாடச் செல்வதுபோல் நகையாடியும், பரிகசித்தும், ஒருவர்மேல் ஒருவர் விழுந்து விளையாடியும் அரசனிடம் வந்து கொண்டிருந்தனர்.

அரசனின் முகம் ஈயாடவில்லை; மகிழ்ச்சியில்லை. வந்தவர்களை நோக்கி “நன்று” என்முன். மேற்கொண்டு என்ன சொல்வான் என யாவரும் அமைதியாகக் காத்திருந்தனர். குதிரைப் படைத்தலைவன் ஸொஹ்ரம் என்பவன் அரசனை நோக்கி “மன்னர் மன்னவ! இன்னும் எங்களைப் போராட விடுங்கள்; பயந்தோடிய கலிங்கரை நாங்கள் எல்லோரும் பின்தொடர்ந்து மேலும் போராடுவோம். கலிங்க நாட்டைக் கைப்பற்றும் காரியம் இன்னும் சரியாய் முடியவில்லையே!

எங்கட்கு ஆணையிடுங்கள். சில மாதங்களில் கலிங்கம் நம்மதாகும்; ஆட்சி நம்மதாகும், மேன்மை தங்கிய மன்னர் சாம்ராஜ்யம் மேலும் மேலும் விரிவடையும்.''

அசோகன் குழுமிநிற்கும் வீரப்பிரதானிகளை உற்று நோக்கியபடி ''நன்றுதான்'' என்றான். ''ஸொஹ்ரமுடன் யார் யார் செல்ல இருக்கிறீர்கள் ?''

உடனே எல்லோர் குரலும் ஒரே குரலாய் நின்றது. ''நாங்கள் அனைவரும் மன்னவ! கலிங்கரை மேற்கொண்டு பின்தொடர ஆணையிடுங்கள்! நேற்றைய வெற்றியை ஒரு ஆரம்ப விழாவாக நினைத்து மகிழ்வோம்.''

அசோகன், இருப்பினின்றும் எழுந்தான். ''அது ஒரு ஆரம்ப விழாதான்'' என்றான். எல்லோரும் மகிழ்ச்சியினால் துள்ளி யெழுந்தனர். அசோகன், ஒரு கையை உயர்த்தி அமைதி நாட்டச் செய்தான். இன்றே நாம் வீடு திரும்பல் வேண்டும்; போர் முடிவடைந்துவிட்டது''. இதைக் கூறிய மன்னன், தீடீரென்று உட்பக்கமுள்ள கூடாரத்திற்குச் சென்று பஞ்சணையில் படுத்தான்.

அதனால் அசோகனும், வெற்றிக் களிப்புள்ள அவனது வீரர்களும் வீடு திரும்பினர். அரண்மனை சென்று அரியணையிலமர்ந்த மன்னன், மந்திரி தந்திரிகள், பிரதானிகள், ஆலோசகர்கள், துணை ஆணையர்கள் யாவர்க்கும் அழைப்பு விடுத்தான். எல்லோரும் வந்தவுடன், அவர்கள் முன்னின்று ''போரின் கொடூரத்தை யான் கண்டுகொண்டேன். பகைவன் எவனாவது என்மீது வீணே போர்தொடுத்தாலொழிய யான் இனி, என் உடைவாளைத் தொடேன்! என்னுடைய பழைய கனவுகளெல்லாம் சுக்கு நூறாயின; நசித்தொழிந்தன; ஆனால் இன்று புதுமைக் கனவு கண்டுள்ளேன். போரை வெறுத்த யான், மக்களுக்குப் போதிய சுகத்தை நல்குவேன்! வாள்களும், கேடயங்களும், கையாண்ட என் மக்களுக்கு இனியான், நிலம் உழக் கலப்பைகளும், ஏர்களும் மற்ற சாதனங்களும் மனமாற நல்குவேன்! வறுமை, வெறுப்பு, வேதனை, இவற்றை மட்டும் காண நேர்ந்த என் மக்கள் இனிமேல், நிறைவு, சுகம், மகிழ்வு

இவற்றைக் காண்பார்கள். வெற்றி பெற்றுப் போர்க்களப் பரணி பாடுவதைக் கேளாமல் இனியான், சின்னஞ்சிறு மழலைச் செல்வங்களின் அமுதச் சிரிப்பொலியையும், அவைபெற்ற தாய்மார்களின் சுககீதமும்தான் கேட்க ஆரம்பிப்பேன்'' என்று அறைந்தான்.

இந்த விரதத்தால் அசோக மன்னனின் புதிய லட்சிய ஆட்சி உதயமாயிற்று. இப்போது அவன் திரட்டியுள்ள புதிய படை உண்மைக்கே போராட உருவானது. ஆனால் அப்படை, செயல் வீரர்களைக்கொண்டது. வறண்ட இடங்களில் எல்லாம் சிறந்த கிணறுகளை வெட்டினான் அசோகன். நாடு முழுவதிலும் வகை வகையான எண்ணற்ற மரங்களை நட்டுச் செழிப்பைக் கண்டான். அவற்றால், வெம்மையில் வேதனையுறும் வழிப்போக்கர்கள் எல்லையற்ற இன்பம் பெற்றார்கள். பெரிய திட்டங்களிட்டு அசோகன் அரிய வைத்தியசாலைகள் நாடெங்கிலும் கட்டிவைத்தான். அழகிய பூங்காக்களைக்கொண்ட உயரிய நகரங்களை நிர்மாணித்தான். பள்ளிகளையும், மடங்களையும், படிப்பிற்கும், இசை வளர்ச்சிக்கும் எனக் கட்டினான். அழகு ஒழுகும் சாலைகள் உருவாக்கினான். அவனதாட்சியில், நேர்மையும், ஒழுங்கும், உண்மையும் இருந்தமையால், ஒரு சாதாரண மாது கூடத் தன் கைக் குழந்தையுடன் வேறு துணையின்றி நாட்டின் எப்பாகத்திற்கும் நலமுடன் சென்று வீடு திரும்புவாள் என்று பெரியோர்களால் புகழ்ந்து பேசப்படுகிறது.

இந்த லட்சியக் கனவு அசோகனுடையது என்றாலும் உலகத்திற்குப் புதியதுதான். அக்காலத்திலேயே இவ்வளவு சீருஞ் சிறப்புமாய் அரசாண்டவன் அசோகன் என்று கூறி உலகம் வியப்படைகிறது. அவன் ஆண்ட காலம் 'பொற்காலம்' எனஉலகத்தால் பெருமைபடப் போற்றப்படுகிறது. ஆனால் அப்பொற்காலம் கடந்து போனது. இருப்பினும் அக்காலம், தனது மங்கா ஒளிவீசி நம்மை உளம் ஓங்கச் செய்கிறது.

குறிப்பு:- இக்கட்டுரை Stephen Southwold என்பவர் எழுதிய The choice of Asoka என்ற ஆங்கிலக் கட்டுரையினின்றும் தமிழாக்கம் செய்யப்பட்டது ஆகும்,

மதுரைக் கலம்பகம் உரைநடை

தருமபுர ஆதீன வித்துவான்,
"திருவண்ணாமலை ஆதீனவிரிவுரையரசு, மதுரை ஆதீனச் சித்தாந்த
சைவ வித்தகர், சித்தாந்தப் புலவர்மாமணி, பாலகவி"
வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

[மலர் 13. இதழ் 4-ன் தொடர்ச்சி]

ஆவா வென்னே தென்னவர் கோற்கன் றணிசாந்தம்
நீவா நின்றாய் நின்றில காமா னலமென்னே
கோவாம் வில்லி கொடுந்தனு வுங்கூ னிமிராதான்
மூவா முதலார் மதுரையி தன்றோ மொழிவாயே. 66

அந்தோ! அந்தோ! என்னே! என்னே! தென்னாட்டவர்க்கு மன்னனாகிய கூன் பாண்டியனுக்கு அந்த நாளில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பூசிய திருநீற்றை நீ இப்பொழுது எனது உடம்பின் மேல் தடவுகின்றாய். அங்ஙனம் தடவியும் அப்பாண்டியனது வெப்புநோய் நின்றது போல எனது காமவெப்ப நோய் நின்று போகவில்லை. இது என்ன காரணமோ? தலைவனாகிய விற்றொழில் வல்ல மன்மதனது கொடிய கருப்பு வில்லும் வளைவு நிமிர மாட்டாது. முதிர்வை அடையாத முதற் பொருளாகிய சொக்கேசப் பெருமானது மதுரை நகரம் இது வல்லவா? தோழியே! சொல்வாயாக.

மொழிக்கய லாகி வேத முடிவினின் முடிந்து நின்ற
வழிக்கய லாகார் கூடல் வலைவாணர் பெருவாழ் வன்னீர்
கழிக்கயல் விற்பீர் மற்றிக் காசினி யேழு முங்கள்
விழிக்கய லுக்கே முற்றும் விலையென்ப விளக்கிட் டீரே. 67

சொல்லுக்கு அப்பாற்பட்டு வேதாந்தத்தில் முடித்துக் காட்டப்பெற்ற சித்தாந்த நெறிக்கு அப்பாற்படாதவராகிய மதுரை யம்பதியிலுள்ள வலையர் வடிவங்கொண்ட சொக்கேசப் பெருமானது பெரிய வாழ்க்கையை ஒத்துச் சிறந்தவரே! உப்பங் கழியில் உள்ள கயல்மீன்களை விற்கின்ற நீர் இந்த உலகங்கள் ஏழும் உமது கண்களாகிய கயல்மீனுக்கே விலையாகும் என் பதைச் செவ்வையாகத் .தெரிவித்தீர்.

விற்கரும்பே யொன்றிதுகேண் மெல்கரும்பே யன்னார்தஞ்
சொற்கரும்பே முற்றுமலர் தூற்றுமால் – நற்கரும்பை
ஆரளார் கடம்பவனத் தையருமற் றென்னீயும்
வாளா வலர்தூற்று வாய். 68

மன்மதனது வில்லாகிய கரும்பே! நான் சொல்லும் இவ் வொரு சொல்லைக் கேட்பாயாக. மென்மையான கரும்பையே ஒத்த பெண்மக்களது சொற்களாகிய கரும்பே ஊர் முழுவதும் அறியும்படி இவளைப் பழி தூற்றும் கடம்பவனத்தில் எழுந்தருளி உள்ள தலைவராகிய சொக்கேசப் பெருமானும் நல்ல கரும்பு போன்ற இவளை வந்து கூடி ஆட்கொள்ளுகின்றாரில்லை. ஏன் நீயும் வீணாக மலரம்புகளை இவள்மேல் சொரிகின்றாய்?

வால விருத்த குமார னெனச்சில
வடிவு கொண்டுநின்று யென்று வம்பிலே
ஞால நின்னை வியக்கு நயக்குமென்
நடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேன்
பால லோசன பாநுவி லோசன
பரம லோசன பக்தச காயமா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்ப வனேசனே. 69

நெற்றியில் நெருப்புக் கண்ணையுடையவனே! கதிரவனாகிய வலக்கண்ணையுடையவனே! சந்திரனாகிய இடக்கண்ணையுடைய வனே! மெய்யடியார்களுக்குத் துணையாயிருப்பவனே! பெரிய கூற்றுவனுக்கும் கூற்றுவனானவனே! முத்தலைச் சூலப்படையை யுடையவனே! பிரமகபாலத்தையேந்தியவனே! ஏகம்பவாணனே! உமையம்மையோடு கூடியவனே! கடம்பவனக் கடவுளே!

குழந்தையென்றும், கிழவனென்றும், காளையென்றும் சில வடிவங்களை எடுத்துக்கொண்டு முன்பு நீ நின்றுயென்று உலகத்தார் உன்னை வீணாக வியந்து துதிப்பார்கள். நான் பல நாட்களாகப் பல பிறப்புக்கள் எடுத்துக் குழந்தையுங் காளையுங் கிழவனுமாகி ஆடிய எனது ஆட்டத்தைப் பார்த்தும் வியப்படையாமைக்கு என்ன காரணத்தைச் சொல்லுவேன்?

கட்டு வார்குழ லீர்கயற் கண்ணினுட்
இட்ட மாஞ்சொக்க ரைக்கரை யேற்றினீர்
மட்டில் காமம டுப்படிந் தேற்கென்னே
கொட்டு வீர்பின்னுங் குங்குமச் சேற்றையே. 70

பல வகையாக முடித்துக் கட்டப்பெற்ற நீண்ட கூந்தலை யுடைய மங்கையரே! மீனுட்சி அம்மையாருக்கு விருப்பமாகிய சொக்கநாதப் பெருமானை நீங்கள் தெப்பங் கொண்ட நீர் நிலை யிலிருந்து கரையேற்றினீர்கள். அளவுபடாத காம மடுவில் விழுந்து கிடக்கின்ற எனக்கு மீண்டும் மீண்டும் குங்குமப்பூக் குழம்பை மேலே சொரிகின்றீர்கள். இது என்ன அநியாயம்!

குங்குமச்சே றுடுங் கொடிமாட வீதியில்வெண்
சங்குமொய்க்குஞ் சங்கத் தமிழ்க்கூடல் – அங்கயற்க
ணம்மையிடங் கொண்டாரை யஞ்சலித்தே மஞ்சலமற்
றிம்மையிடங் கொண்டார்க் கினி. 71

குங்குமப் பூவின் சேறு நிரம்பிய கொடிகளையுடைய மாளிகைகள் நிறைந்த திருவீதிகளில் வெண்ணிறமான சங்குகள் வந்து நிறைகின்ற சங்கத் தமிழ் வளரும் மதுரை யம்பதியில் எழுந்தருளியுள்ள அழகிய மீனுட்சியம்மையை இடப் பாகத்திலே கொண்டவரான சொக்கேசப் பெருமானைக் கை கூப்பி வணங்கினேம். இனிமேல் எருமைக்கடா வாகனத்தை உடையவரான எமதருமனுக்கு அஞ்சமாட்டோம்.

இன்னீ ரமுதுக் கிடமுங் கடுவுக்
கெழிலார் களனுங் களனு வருளா
நன்னீ ரமுதக் கடலா கியுளார்
நரியைப் பரியாக் கிநடத் தினரா
லந்நீர் மையின்மிக் கென்னீர் மையெனு
வடன்மா மடன்மா வரமா றுசெயா

மைந்நீ ரளகத் திளமா னையனீர்
வருவேன் மதுரைத் திருவீ தியிலே. 72

மை போன்ற கருமையாகிய கூந்தலையுடைய இளமானை யொத்த மங்கையரே! இனிய தன்மையையுடைய உமையம்மை யாகிய அமுதத்துக்கு இடப்பாகத்தையும் நஞ்சுக்கு அழகு பொருந்திய கழுத்தையும் இடங்களாகக் கொடுத்தருளி நல்ல தன்மையையுடைய அமுதக்கடல் போன்ற இன்பப் பொருளாகி யுள்ளவரான சொக்கேசப் பெருமான் நரிகளைக் குதிரைகளாக்கி நடத்தினர். அந்தத் தெய்வத் தன்மையைவிட எனது தன்மை சிறந்தது என்று மடல்களையுடைய பனைமரம் வலிமையை உடைய குதிரையாய் வரும்படி மாற்றி மதுரை நகரத்தின் அழகிய திருவிதியில் நாளை நான் வருவேன்.

திருவைப் புணர்பொற் புயமைப் புயல்கைத்
திகிரிப் படையுய்த் தவர்கூடற்
றருமொய்த் தருமைச் சிறைபெற் றனமுத்
தமிழ்வெற் பமர்பொற் கொடிபோல்வீர்
புருவச் சிலையிற் குழைபட் டுருவப்
பொருகட் கணைதொட் டமராடுஞ்
செருவிற் றெலைவற் றவரைக் கொலுநற்
சிலைசித் தசர்கைச் சிலைதானே. 73

திருமகளைத் தழுவுகின்ற அழகிய தோள்களையுடைய கரிய மேகம் போன்ற திருமாலினது கையில் தாம் உண்டாக்கிச் சலந்தராசுரனது உயிரை வவ்வச் செய்த சக்கரப் படையைக் கொடுத்தருளியவரான சொக்கேசப் பெருமானது மதுரையம் பதியிலுள்ள மரங்கள் நெருங்கியிருத்தலால் அருமையான இறகுகளை மீண்டும் பெற்றுற் போன்ற முத்தமிழ் வழங்கும் மலையில் வாழ்கின்ற அழகிய பூங்கொடி போன்ற மங்கையரே! மன்மதனது கையிலுள்ள கருப்பு வில் புருவமாகிய வில்லில் காதிலே பட்டு ஊடுருவும்படி பிறழுகின்ற கண்ணாகிய அம்பைத் தொடுத்துப் பெண்கள் அமராடுகின்ற போரிலிருந்து நீங்குத லில்லாத என்போன்ற வரைக் கொல்லும் நல்ல வில்லேயாகும்.

(தொடரும்)

மதுரைப்பன்னிரு திருமுறை மன்றத்தில் அப்பர் சுவாமிகள் விழா 27--4--62உ திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் இளவரசு, வித்துவான் ஸ்ரீ. முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் அவர்கள் தலைமை தாங்கிய சமயம்



மதுரைப் பன்னிரு திருமுறை மன்றத்தலைவர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் பிரதம ஸ்தானிகம் சிவதர்ம பாஸ்கர சிவஸ்ரீ. ம. க. சுந்தரேசபட்டர் - ஸ்ரீகாசி மடம் இளவரசு சுவாமிகளுக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துரை பகருதல்

மதுரைப் பன்னிரு திருமுறை மன்றம் அப்பர் சுவாமிகள் விழாவில் 27-4-62ல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
இளவரசு, வித்துவான் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் அவர்கள் தலைமையில்



மதுரை சப் ஜட்ஜ் திரு. டி. எஸ். இராமலிங்கம் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் தொடக்கவுரை கூறுதல்

உ

சிவசிவ

திருச்சிற்றம்பலம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு

வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

27—4—1962 வெள்ளிக்கிழமை

மதுரைத் தெற்காடிவீதி பன்னிரு திருமுறை மன்றத்தில்

அப்பர் சுவாமிகள் குருபூசை விழாவில்

தலைமைதாங்கியவமயம்

மதுரைப் பன்னிரு திருமுறை மன்றத்தார் சமர்ப்பித்த

வரவேற்பிதழ்

அருணந்தி முனிவர் அருள்பெறு தகவோய்!

முத்தமிழ் வளரும் மதுரையம்பதியில் தெய்வத் தீந்தமிழ் ஆகிய திருநெறிய தமிழை — ஞானத் தமிழை வளர்க்கும் தொண்டில் சிறிது ஈடுபட்டிருப்பது மதுரைப் பன்னிரு திருமுறை மன்றம். பற்பல தலங்களில் பரிசுகள் அளித்தும், ஓதுவார் தம்மை நியமனஞ் செய்தும், சிவசிவ ஒலிமண்டபங்கள் அமைத்தும், பலப்பல தலங்களில் இராமுழுவதுமே திருமுறை முழக்கம் முழங்கச்செய்தும், பன்னிரு திருமுறை பதிப்பித்தருளியும், அளவில் பல் வழிகளில் திருமுறை பரப்புதல் காசிமடத்துப் பல பணிகளில் ஒன்றும். மன்னியபெருமைசால் காசிமடத்தில், 20ம் நூற்றுண்டுக் கொடைவள்ளலாய், மெய்ஞ்ஞானத் தமிழைப் பரப்புகின்ற சீலர்களாய், அன்னதானத்துக்கு அரியபற்றுக்கோடாய் ஒழுக்கத்திற்கு இருப்பிடமாய், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேராய், செல்லும்வாயெல்லாம் அறம் செய்பவர்களாய்,

அன்பு அருள் ஈகை கண்ணேட்டம் வாய்மை முதலிய நற்பண்புகளுக்கு நிலைக்களனும், ஆதி குமரகுருபரரே மீண்டும் மானுடச் சட்டை தாங்கி வந்தாலொத்த அருங்குணக் குன்றாய் விளங்குபவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆவார்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுடைய அன்புக்குரியவராய் ஸ்ரீ காசிமடத்து இளவரசாகிய தங்களைத் திருநெறிய தமிழ்த்தொண்டு ஆற்றும் எளியோங்கள் வருக வருக என வரவேற்கிறோம்.

செந்தமிழ்ப் புலமையில் சிறந்தோய் வருக!

செந்தமிழோடு தெய்வத் தீந்தமிழ்த் திருமுறைகளையும் வளர்க்கும் தூயோய் வருக. அப்பர் சுவாமிகள் குருபூசை விழாவில் தாங்கள் முதல்நாள் தலைமை தாங்கிப் பெருமைப் படுத்துகின்றமைக்கு எளியோங்கள் களிமகிழ்வு எய்துகின்றோம்.

ஆணையாசாற்கு அடியுறை பணியும் மாணிபோலவும், மன்னவன் ஆணைவழி நிற்கும் மக்கள் போலவும், தந்தை வழிச் செல்லும் தனயர் போலவும், கதிரவன் முன்னர்த் திங்கள் போலவும், அருணந்தி முனிவர் அன்பின் முன்னர் தமிழகம் முழுதுமே பணிந்து ஒழுகுதலை ஓர்ந்து, அவ்வழி அடியோங்களும் நிற்கச் செந்நெறியில் வாழ்ந்து செந்நெறிகாட்டி வாழ்க என்று வாழ்த்துகிறோம்.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணுதல் திண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைந்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சிவாயவே.

தெற்காடி வீதி,
மதுரை-1,
27—4—62.

இங்ஙனம்,
பன்னிரு திருமுறை மன்றத்தார்.

திருவுந்தியார் - விளக்கவுரை

பண்டித வித்துவான், சைவப்புலவர், சித்தாந்த நன்மணி,
திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

(மலர் 11 இதழ் 7-ன் தொடர்ச்சி)

இங்க னிருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்
அங்க னிருந்ததென் றுந்தீபற
அறியும் அறிவகன் றுந்தீபற. 4

(வி - ரை) ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்ப மயமான சிவபரம்பொருளின் திருவடிகளில் புக்கு நின்றனுபவிக்கும் இன்பத்தினை இங்ஙனம் இருந்ததென்று எங்ஙனம் சொல்ல முடியும்? இங்ஙனம் அநுபவிக்கின்றோம் என்ற தற்போதமும் இழந்த நிலையில் அநுபவிக்கும் அவ்வின்பத்தினை நமது சுட்டறிவினால் சுட்டியறிய இயலாததாகும்.

"செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள்பால் எங்கும் இலாததோர் இன்பம்" என்றும்,

"சொல்லு வதறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது
தெரியேன் ஆஆ செத்தேன் அடியேற்கு
அருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன்"

என்றும் மணிவாசகர் அவ்வின்ப அநுபவத்தை அருளுதல் காண்க.

"அன்றுமுதல் ஆரேனும் ஆராய் உடனாகிச்
சென்றவர்க்கும் இன்னதெனச் சென்றநிலை—இன்றிதனை
எவ்வா றிருந்ததென் றெவ்வண்ணம் சொல்லுகேன்
அவ்வா றிருந்த தது".

ஒன்றும் குறியே குறியாதலால் அதனுக்கு
ஒன்றும் குறியோன் றிலாமையால்—ஒன்றோடும்
உவமிக்க லாவதும் தானில்லை ஒவ்வாத்
தவமிக்கா ரேயிதற்குச் சான்று.

என வரும் திருக்களிற்றுப் படியார்ப்பாடல்கள் இதனோடு ஒப்பிட்டுக் காணுதற்குரியன.

ஏகனுமாகி அனேகனு மானவன்
நாதனு மானான் என்றுந்தீபற
நம்மையே ஆண்டான்என் றுந்தீபற. 5

(வி-ரை) "ஒன்று என்றது ஒன்றே காண்" என்னும் மெய்கண்டார் அருண் மொழிப்படி இறைவன் ஒருவனேயாவன். அவன், அவள், அது என முத்திறப்பட்டு இயங்கும் உலகத்தில் உயிர்க்குயிராக விளங்கி அருள்செய்யும் திறம்பற்றி அவ்விறைவன் ஒருவனே அனேகன் ஆகின்றான். அகரவுயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாமாறு போல அவ்விறைவன் இல்லையேல் உலகியக்கம் இல்லையாதலால் அவ்விறைவனே உலகிற்குத் தலைவன் எனப்படுவான். அவன்தான் நம்மை யாட்கொண்டருளும் குருமூர்த்தியாவன்.

ஏகனே அனேகனாகி நாதனுமானான் என்னும் கருத்தினை "ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க" என்னும் மணிமொழியும் விளக்கி நிற்றல் காணலாம். அவனே நம்மையாட்கொண்டருளும் குருமூர்த்தியாவன். இதனைப் "புவனியிற் சேவடி தீண்டினன் காண்க. அவன் எனை ஆட்கொண்டருளினன் காண்க, சிவன் என யானும் தேறினன் காண்க" எனவரும் மணிவாசகரின் அநுபவ மொழியால் நன்கறியலாம்

நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தான்என் றுந்தீபற.

(வி–ரை) உலகினுள் என்செயலெல்லாம் உன்விதியே, நீயே உள்நின்றும் செய்வித்தும் செய்கின்ருய் என்றும், நிலவுவதோர் செயல் எனக்கு இன்று உன் செயலே என்றும் நினைந்த வண்ணம் நம்செயல் அற்று, தான் அல்லாததனைத்தான் என்றும், தன்னுடைய தல்லாததனைத் தன்னுடையது என்றும் கருதும், யான், எனது என்னும் செருக்கினையும் அறுத்து விட்டால், சிவபெருமானும் பிறவியறுமாறு செய்து ஏற்றுக்கொள்வான் என்பதாம். அது மட்டுமன்றித் "தந்ததுன்தன்னை" என்புழிப் போலத் தன்னையே தந்தும் நிற்பன்.

சிவஞானசித்தியாரும் இக்கருத்தினை உடன் பாட்டிலும்எதிர் மறையிலுமாக வைத்து விளக்கிப் பேசும். அப்பாடல் வருமாறு.

யான் செய்தேன் பிறர் செய்தார் என்னதுயான் என்னும்
இக்கோணை ஞானஎரியால் வெதுப்பி நிமிர்த்துத்
தான் செவ்வே நின்றிட அத்தத்துவன் தான் நேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித் திட்டோடும்
நான் செய்தேன் எனுமவர்க்குத்தான் அங்கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்
ஊன் செய்யா ஞானந்தான் உதிப்பினல்லால்
ஒருவருக்கும் யான் எனது இங்கு ஒழியாதன்றே."

அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமையெல்லாம் என்னும் தொடக்கம் உடையதும், 'நாயிற்கடையாம் நாயேனை' என்னும் தொடக்கம் உடையதுமான திருவாசகங்கள் நம் செயலற்று வாழும் அநுபவ நிலையை விளக்குவனவாம்.

கயல்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக் கலந்தாண்டலுமே
அயல்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயல்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

வான்கெட்டு மாருதம் மாய்ந்தழல்நீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்(கு)
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு என்னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

எனவரும் திருவாசகங்களும் ஈண்டு ஒப்பிட்டு உணர்தற்குரியன.

(வளரும்)

கலம்பகம்

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள், எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்.

கலம்பகம் என்பது பல்வகை மலர்களால் தொடுக்கப் பெறும் பூமாலை போன்று, பல்வகைப் பாக்களால் தொடுக்கப் பெறும் பாமாலையாகும்.

கலம்பகத்தின் இலக்கணம், "விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" எனும் தொல்காப்பியச் செய்யுளியல் சூத்திர வகையினுள் அடங்கும். இதனை, 'விருந்துதானும் பழங் கதை மேலது அன்றிப், புதிதாகத் தாம் வேண்டியவற்றால் பல செய்யுளும் தொடர்ந்து வரத் தொடுக்கப்படும் தொடர்நிலை மேலது' என விளக்குவர் உரையாசிரியர். தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாய இக்கலம்பகத்தின் இலக் கணத்தைப் பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கண, விளக்கம் போன்றவற்றில் காணலாம்.

சொல் விளக்கம் :

கலம்பகம், கலப்பு + அகம் என விரியும்; கலப்பு என்பது மெலித்தல் விகாரம் பெற்று கலம்பு என நின்றது. கலம்பகத் திற்கு உறுப்பாக அமையும் துறை பலவும் கலத்தலைத் தன்ன கத்தே கொண்ட நூல் எனப் பொருள்படும். கலத்தல் என் பதனையே யாப்பிலக்கண நூலிற் காணப்பெறும் பாவும் பாவினமு மாகிய செய்யுள் வகைகளும், அகப் பொருள் புறப் பொருள் கருத்துக்களும் இயைந்து கலந்து வருவது எனக் கூறலாம். இங்ஙனம் காரணக் குறியாகக் கூறுவதன்று என்பார் ஏதுப்

பெயராயும் இயம்புவர். பன்னிரண்டு மரக்கால் எனப் பொருள் படும் 'கலம்' என்னும் சொல்லும், கடவுளது அறுகுணங்களைக் குறிக்கும் 'பகம்' என்னும் சொல்லும், (கலம் + பகம்) குறிப் பாய்ப் பன்னிரண்டு, ஆறு என்னுந் தொகையை மாத்திரம் உணர்த்தி உம்மைத் தொகையாகப் புணர்ந்து பதினெட்டு உறுப்புக்களை யுடைய பிரபந்தத்திற்குப் பெயராக நின்ற தாகவும், அகப்பொருள் கலத்தலையுடையது எனக் காரணக் குறியாயிற்றெனவும் கருதுகின்றனர். 'முதனூல் கருத்தன் அளவு மிகுதி, பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித் தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே' என நன்னூல் நவிலும் நூல் வகையுள், நுதலிய பொருளானும் தன்மையானும் பெயர் பெற்றது இவ்விலக்கிய வகை என்றியம்பலாம்.

கலம்பக உறுப்பு :

கலம்பகத்தின் உறுப்புக்கள் பதினெட்டு எனப் பகர்வர். புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்பனவாம். இப்பதினெட்டும் கலம் பகத்திற்கு நிலையாய உறுப்புக்கள்; இன்றியமையாத கூறுகள். ஏனையன இன்ன வகையான் பொருளாய் வருவன எனும் நிலை பேறில்லாதன. இதனை,

வைக்கும் புயந்தவம்வண் டம்மனை பாண்மதங்கு
கைக்கிளைசித் தூசல் களிமடக்கூர்-மிக்கமறம்
காலந் தழையிரங்கல் சம்பிரதங் கார்தூது
கோலுங் கலம்பகத்தின் கூறு. (வெண்பாப் பாட்டியல்)

'கடிசொல் இல்லை காலத்துப் படினே' என்ற விதிப்படி இப் பதினெட்டே யன்றிப் பிச்சியார், கொற்றியார், இடைச்சியார் வலைச்சியார், கீரையார் முதலாயின வருதலும் உண்டு. இவை அகப்புறக் கைக்கிளையின் பாற்படுவன வாயினமையின் சிறப் புடையனவாகக் கருதப்படமாட்டா.

உறுப்பு விளக்கம் :

உறுப்புக்கள் இன்னின்ன என்பதோடு, அவற்றைப் பற்றிய விவரமும் அறிதல் வேண்டும். புயவகுப்பு: பாட்டுடைத் தலை

வனது தோளைப் பல்லாற்ருன் புகழ்ந்து வகுப்பிஞற் பாடுவது. அம்மானை: இது 'அம்மனங்காய்' எனவும் வழங்கும். மூன்று பெண்கள் கூடிக் கலம்பகத் தலைவனது நல்லியல்புகள்பற்றி நயம் படப் பேசிய வண்ணம் அம்மனை ஆடுவது. ஒருத்தி தலைவனைப் புகழ்ந்து கூற, வேருெருத்தி அதில் ஐயங்கொண்டவளாய் விஞவெழுப்ப, இன்னெருத்தி அவ்விஞவிற்கு அவ்விருவரும் ஒப்புமாறு விடை கூறுவதாக அமையும் போக்கினது. ஊசல்: மகளிர் ஊஞ்சலாடிய வண்ணம் தலைவனது திறம் கூறிப் பாடுவதாகும். ஆசிரிய விருத்தத்தாலேனும், கலித்தாழிசையானும், 'ஆடிருசல்,' 'ஆடாமோ ஊசல்', 'ஆடுக ஊசல்' என்பன வற்றுள் ஏதேனும் ஒன்று கொண்டு முடியப் பாடுவதாகும். யமகம் (மடக்கு) நூலின் இடையிடையே மடக்கு என்னும் சொல் லணி அமைய செய்யுட்களை அமைத்துப் பாடுவது. களி: கட் குடியர் கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகப் பாடுதல். மறம்: அரசன் ஒருவன் மறவர் மகளைத் தனக்கு மணம்பேசி வருமாறு தூதன் ஒருவனை அனுப்ப, மறவர்கள் அத் தூதுவனிடம் மணவினை மறுத்துக் கூறிய தோடமை யாது, தூது விடுத்த அரசனை இகழ்ந்து பேசியும், தூதனைத் திருப்பிவிடுவதாகப் பாடு வது. இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை-காஞ்சித் திணையிற் மகட்பாற் காஞ்சியில் காணுமாறு கொள்ளின்-(ஏந்திழையாட் டருகென்னும், வேந்தனேடு வேறு நின்றன்று' என்பது நோக்குக). போர் செய்ய வந்த அரசர்களை எதிர் சென்றூன்று தலைக் கூறுவதாகும். இதன்படி மறம் என்பது மறவர்தம் வீரத் தின் சிறப்பைத் தோற்றுவிப்பதாகும். ஆனல் தொல்காப்பிய காஞ்சித் திணையின்படி (நிகர்த்து மேல் வந்த வேந்தனேடு முது குடி, மகட்பா டஞ்சிய மகட்பா லானும்-புறத்திணை 24), மறம் என்பதனை எண்ணின் உயிர் நிலையாமையை உணர்த்தும் என லாம். சித்து: இரசவாதம் செய்பவர்கள் தங்கள் ஆற்றலைத் தலைவன் ஒருவனிடம் எடுத்தோதுவதாகச் செய்யுள் இயற்று வதாகும். (இரசவாத வித்தையாவது இரும்பு, செம்பு போன்ற உலோகத்தைப் பச்சிலைகளால் புடமிட்டுப் பொன் போன்ற பிறி தோர் உலோகமாக மாற்றுவது). காலம்: தலைவன் பொருளீட் டல் போன்ற காரணங்களால் பிரிந்து செல்லத் தலைவியானவள் கார் முதலிய காலங்களால் தனக்கு நேரும் துயரம் கூறுவதாகப்

பாடுவது. மதங்கி: இளநங்கை ஒருத்தி தன் இரு கைகளிலும் வாளேந்திச் சுழற்றிய வண்ணம் தானும் சுழன்று ஆடுங்காலை, அவளிடத்துக் காமம் கொண்டான் ஒருவன் அம்மாதின் எழிலை யும் அதனாலுண்டான தம் காம மயக்கையும் வெளிப்படுத்து வதாகப் புலவர் செய்யுள் இயற்றுவது. வண்டு: தன்னைப் பிரிந்து சென்ற தலைவனிடத்துத் தன் காதல் துயரினைத் தெரிவித்தற் பொருட்டுத் தலைமகனிடம் தூதாகச் செல்லுமாறு வண்டை விளித்துத் தூது விடுதல் தோன்றப் பாடுவது. தலைவனது தோளிலுள்ள மாலையில் சொரியா நிற்கும் தேனை உண்ணச் செல்லும் வண்டை, தேனுண்ட பின்னர் தனது குறையினையும் தலைவனது செயல் பொருந்தக் கூறுமாறு வேண்டுவது. கார் அல்லது மேகம்: அது போன்றே பிரிந்து வேற்று நாட்டிலுள்ள தலைவன்பால் மேகத்தைத் தூது விடுப்பதை விளம்புவது. கைக்கிளை: இதனை ஒரு தலைக்காமம் என்பர்; காட்சி, ஐயம், தெளிவு, குறிப்பறிதல் என நான்கு நிலையின் இதுவும் அகப் பொருட் துறையில் அமையும் கைக்கிளையும் ஒன்றே. தோழியர் புடைசூழப் பொழிலகம் வந்த தலைமகள் தோழியர் பிரியத் தனித்து நிற்பாள். அங்கு, வேட்டையாட வந்த தலைவன் கண்ணுறுவான்; உடன் வந்த தோழர்களும் அவனைப் பிரிவர். தனித்து நின்ற தலைவன் தனியே நின்ற தலை மகளை எதிர்ப்பட்டு, இவளை அணங்கு கொல்! ஆய்மயில் கொல்லோ! என ஐயுற்றுப் பின்பு, மாலை வாடுதலால் நில மகளே எனத் தெளிவான். இதுவே இப்பகுதியில் இடம்பெறும். சம்பிரதம்: மாயவித்தை வல்லான் ஒருவன் தன் வல்லமையை வேறு ஒருவர்பால் தானே புகழ்ந்து கூறுவதாக அமைப்பது. இந்திரசாலம் இயம்புவதுமாம். தவம்: வேண்டுதல் வேண்டாமை யிலாத இறைவனை யடையின் தவத்தால் எய்தும் பயனினும் பெரும்பயனை எளிதிலே எய்துவதாக எடுத்தோதுவது. பாண்: தலைவி பாணனை வெகுளல். பரத்தைபாற் சென்ற தலைமகன், சின்னாள் கழித்துத் தலைவியிடம் செல்லக் கருதிலரென்று, தன் பரத்தமைப் பிரிவால் தலைவனுக்கு உண்டான ஊடலைத் தணித்து வருமாறு பாணனை அனுப்ப, அவனும் சென்று தலைவன்பால் இரக்கம் தோன்றுமாறு எடுத்தோதத் தலைவி பாணனை வெகுண்டு வெருட்டுதல் தோன்றக் கூறுவது. ஊர்;

குடிமை என்பர். பாட்டுடைத் தலைவனது ஊர் அல்லது வழி மரபு இன்னதென எடுத்தியம்புவது. தழை: இடை யிடையே மலர்கள் பெய்து இளந்தளிர்களாற் செய்யப்பட்டதோர் ஆடையாகும். இதுபற்றி இரு கருத்துளது: களவின்கண், பாங்கியின் துணைகொண்டு தலைவியை அடைய எண்ணிய தலைவன், தலைவியும் பாங்கியும் ஒருங்கிருக்கும் செவ்வி பார்த்துத் தழையும் கண்ணியும் ஏந்திச் சென்று, தான் வேட்டையாட வந்தவன் போல அவர்களை நோக்கிச் சில செப்ப, பாங்கி அவனை நகையாடிக் கூறுதல் தோன்றப் பாடுவது; அல்லது தோழி தனித்து இருக்கும் அமயம், தலைவன் பூந்தழையுடை (கதம்பம் போன்றது) ஏந்திச் சென்று, தன் கையுறையாக அதனைத் தலைவி ஏற்குமாறு செய்யவேண்டும் என வேண்ட, தோழி அதனை மறுக்கவே, 'மடலேறி எண்ணியது முடிப்பன்யான்' எனத் தலைவன் இயம்பவே, வேறு வழியின்றி அதனைப் பெற்றுச் சென்று தலைவி ஏற்குமாறு செய்வதாகச் செய்யுள் செய்வதாகும். இரங்கல்: காமமிக்க கழிபடர் கிளவி எனவும் மொழியப் பெறும். நெஞ்சு இரங்குதலாகும். தலைவனைப் பிரிந்தமையான் துயருறும் தலைமகள் வருந்திக் கூறுதல் தோன்றப் பாடுதல். இதில் தலைவி பெரும்பாலும் நெய்தல் நிலத்துக் கருப்பொருள்களைப் (கடலோரப் பொருள்களைப்) பார்த்துத் தன் துன்பத்தைக் கூறுவாள். குறம்: தலைவிக்கு அவள் காதலித்த தலைமகனது வாய்ப்பைக் குறத்தி குறிதேர்ந்து கூறுவது.

வலைச்சியார்: வலையன் ஆண்பால்; வலைச்சி பெண்பால். வலைச்சியைக்கண்டு, காமுற்றான் ஒருவன், அவ்வலைச்சியை முன்னிலைப் படுத்தித் தம் காதலுணர்வை எடுத்து மொழிவதாகப் புலவர்கள் பாடுதல். இடைச்சியார்: தெருவிலே பால், தயிர், போன்றன விற்றுவரும் இடைக்குல மகளைக் கண்டு காதலுற்ற ஒருவன் தன் காதலை வெளிப்படுத்துமாற்றான் அவளை முன்னிலைப் படுத்தி மொழிவதாகப் பா புனைவது. கோற்றியார்: தலை மொட்டையடித்துக் கொண்டு, வைணவச் சின்னம் அணிந்து, சூலம் முதலியன கையில் ஏந்தித் தெருவில் பிச்சையெடுத்து வரும் மகளைக்கண்டு மையலுற்ற ஒருவன் தன் வேட்கையை வெளிப்படுத்துவதாக அமைவது. கொற்றி என்பது துர்க்கையைக் குறிக்கும்: துர்க்கை போன்று இம் மகளிர் சூலம் முதலியன

ஏந்தி வருவதால் கொற்றியார் என்றழைக்கப்படுகின்றனர். கலம்பகப்பா: முதலில் ஒருபோகு வந்து, அதன்பின் ஒரு வெண் பாவும், அதனையடுத்து ஒரு கலித்துறை வந்தால் அவை முத லுறுப்பு. அதன்பின் ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா வஞ்சித் துறை, வஞ்சி விருத்தம், வெண்டுறை, வெண்பா, மருட்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம், என்ற பாக்கள் இயைந்துவர இயற்றல் வேண்டும்.

கூறு மொருபோகு வெண்பாக் கலித்துறைகள்
மாறின் முதலுறுப்பா மன்விருத்தம்—வேறகவல்
வஞ்சித் துறைவிருத்தம் வான்றுறைவெண் பாமருட்பா
எஞ்சாக் கலியினங்கொண் டிட்டு. *(வெண்பாப் பாட்டியல்-11)*

என்பது கொண்டு தெளியலாம். இதனையே நவநீத நடனர்,

சொன்ன கலம்பகந் தொக்கவச் செய்யுள் துடியைவென்ற
மின்னிடை வெண்டுறை வெண்பா வகுப்பக வல்விருத்தம்
இன்னிசை யாசிரிய யம்மாசிரிய விருத்தமெல்லாம்
மன்னு மருட்பாவஞ் சித்துறை வஞ்சி விருத்தமென்னே.
(நவநீதப் பாட்டியல்-34)

என நவில்வர். அஃதாவது, கலம்பகம் பாடுமிடத்து முன் சொன்ன உறுப்புக்களுடனே இடையிடையே வெண்பாவும், ஆசிரியப்பாவும், ஆசிரிய விருத்தங்களும், மருட்பாவும் (மருட்பா—ஒரே செய்யுளில் முற்பகுதி வெண்பாவும், பிற்பகுதி அகவலாகவும் அமைவது), வஞ்சித் துறையும், வஞ்சி விருத்த மும் இவை முதலாகிய பல செய்யுட் திறமும் கலந்து வைத்து அந்தாதியாகப் பாடுவது கலம்பகமாகும்.

பாவும் பகுதியும்: இங்ஙனம் உறுப்பும் பாவும் மிடைந்து, மண்டலித்து வருவது கலம்பகமாகும். இதனை இலக்கண விளக் கப்பாட்டியலார்,

ஒருபோகு வெண்பாக் கலித்துறை யுறமுன்
வருபுய மதங்கம் மானை காலம்
சம்பிர தங்கார் தவங்குற மறம்பாண்
களிசித் திரங்கல் கைக்கிளை தூது
வண்டு தழைமேற் கொண்டெழு முசல்
மடக்கு மருட்பா வஞ்சி விருத்தம்

அகவல் கலியின மகவல் விருத்தம்
வஞ்சி வஞ்சித்துறை வெண்டுறை மருவி
இடையிடை வெண்பாக் கலித்துறை நடைபெற்
றந்தாதி மண்டலித் தாங்கலம் பகமே. (கு-52)

கலம்பகமானது, ஒருபோகு அல்லது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறையாகிய மூன்றும் முதற் கவியுறுப்பாக முதலிற் கூறி; புயவகுப்பு, அம்மானை, காலம், கார், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, தழை, ஊசல், எனப் பதினெட்டு உறுப்பும் (அத்தோடு இடைச்சியார், மதங்கியார், பிச்சியார், கொற்றியார்) எனப் பல்வகைத் தலைப்பில் உலக நிகழ்ச்சி கருதிய துறைகளும் இசைந்து விரவிவர; மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, கலிநிலைத் துறை, வஞ்சி விருத்தம், வஞ்சித் துறை, ஆசிரியத் துறை, வெண்டுறை முதலாய பாவும் பாவினமும் அமைய; இடையிடையே வெண்பாவும் கலித்துறையும் விரவிவர; மடக்குடைச் செய்யுளும், வண்ணம், சந்தம் முதலியன பொருந்த, அந்தாதித் தொடையால் முற்றுற ஒருவனைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெறுதல் கலம்பகம் எனத் தெளியலாம். இதனை இரத்தினச் சுருக்கம், சுருக்கமாக,

சொல்லிய கலம்பகம் சொல்லில் ஒருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை, புயமே
அம்மனை ஊசல் யமகம் களிமறம்
சித்துக் காலம் மதங்கி வண்டே
கொண்டல் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே இன்னிசை
யுறமேய் அகவல் விருத்தம் எனவரும்
செய்யுட் கலந்துடன் எய்திய அந்தம்
ஆதி யாக வரும்என மொழிப (இனவியல்-45)

எனப் பன்னிரு பாட்டியலும், (நவநீதப் பாட்டியல் 33-ம்) பாங்குறப் பகர்கின்றன. நறுமணமிக்க பல்வகை மலர்களைக் கொண்டு தொடுக்கப் பெறும் மாலையில் இடையிடையே கண்டம் வைத்துத் தொடுத்து, மாலையின் முதலிலும் கடையிலும் ஒரே

வகையான வண்ண மலர்களை வைத்துக் கட்டி, இரு தலைப்பை யும் ஒன்று சேர்த்து முடிந்து மாலையாக்குவர்; அது போன்றே முதற் பாட்டில் தொடங்கப் பெற்ற சொல்லே இறுதியிலும் வந்து முடிதல் சிறப்பு; முதலும் கடையும் ஒரே சொல்லால் முடி தலே கலம்பக மரபு. இம்முறை அந்தாதி, மாலை போன்றவற் றிலும் அமைதல் கருதத் தக்கது.

செய்யுட் தொகை அமையுமாறு :

இது காறும் கலம்பக உறுப்பும், பாவும் கண்டோம். இனி இன்னின்னார்க்கு இத்துணை இத்துணைப் பாடல்கள் பாடப்பெற வேண்டும் எனும் வரையறை காணலாம்.

தேவர்க்கும் முனிவர்க்கும் காவல் அரசர்க்கும்
நூறு தொண்ணூற் றைந்துதொண் ணூறே
ஒப்பில் எழுபது அமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்கென விளம்பினர் செய்யுள் (இனவியல்-45)

எனப் பன்னிரு பாட்டியலும்,

ஈசர்க்கு நூறிழிபைந் தையர்க் கிகலரசர்க்
காசற்ற தொண்ணூ றமைச்சருக்காம்--ஏசர்
எழுபானைம் பான்வணிகர்க் கேனையோர்க் காறைந்
திழிபிற் கலம்பகப்பாட் டீண்டு (வெண்பாப் பாட்டியல்-12)

என வச்சணந்தி மாலையும்,

இமையவர்க் கொருநூ றிழிபைந் தையர்க்
கமைதரு மரசர்க் காகுந் தொண்ணூ
றமைச்சருக் கெழுபான் வணிகருக் கைம்பான்
அமைத்தனர் பின்னவர் தமக்கா றைந்தே. (சூ.-53)

என இலக்கண விளக்கமும், (நவநீதப்பாட்டியல்-35-ம்) செய்யுள் செய் முறையினை வரையறுக்கின்றன. தேவர்க்கு நூறும், முனிவர்க்குத் தொண்ணூற்றைந்தும், காத்தல் வல்லஅரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கு எழுபதும், வணிகர்க்கு ஐம்பதும் வேளாளர்க்கு முப்பது செய்யுட்களும் அமைத்துப் பாடுதல் வேண்டுமென முன்னைய புலவர்கள் வரையறை செய்துள்ளனர். முன்னர் இத்தகு கலம்பகங்கள் இருந்தனவோ என்னவோ?

இதுபோது இவ்வரையறை இடம்பெறவில்லை. அரசனைப் பற்றி அமைவதுதான் நந்திக் கலம்பகம்; ஆயினும் அதன்கண் 90 செய்யுட்களுக்குப் பதில் 100 செய்யுட்களன்றோ காணப் படுகின்றன. இற்றை நாளில் கடவுள் ஆன்றோர், அரசர் பற்றி நூறு நூறு செய்யுட்கள் கொண்டு செய்யப் பெற்ற கலம்பகங்களை உள்ளன. ஆகலின் இனிக்கடவுளையும், பெரியோர் களையும், அரசனையும் பற்றி நூறு செய்யுட்கள் அமைத்துக் கலம்பகம் பாடுதல் வேண்டுமெனக் கோடலே சாலும்.

கலம்பகப் பிழிவு:

இனி, கலம்பக உறுப்பு, பாவினம், பாவரையறை அனைத் தையும் அழகாகவும், தெள்ளத் தெளியவும், திறம்படவும் பிரபந்த தீபம் பகர்வது காண்க:

கலம்பக மென்ப தொருபோகு வெண்பா
கலித்துறை புயவகுப்பு மதங்கம் மானை
காலம் சம்பிரதம் கார்தவம் குறமறம்
பாண்களி சித்தோ டிரங்கல் கைக்கிளை
தூது வண்டு தழையூச லென்னுமிப்
பதினெட் டுறுப்பிவை யந்தாதித் துறையால்
ஐவகைப் பாவு மினமும் பொருந்த
இமையோர்க்கு நூறு மந்தணர்க்குத் தொண்ணூற்
றைந்து மரசர்க் குத்தொண் ணூறும்
வைசியர்க் கைம்பதுஞ் சூத்திரர்க்கு முப்பதும்
ஆக மொழிவர் முதுணர்ந் தோரே.

இது கலம்பகத்தின் முக்கூறுகளையும் சுருங்கச் சொல்லி விளங்குமாறு அமைகிறது.

உலாக்களிலெல்லாம் முற்பட்டது ஆதியுலா போன்று, கலம்பகங்களுக்கெல்லாம் முன்னதாக அமைவது நந்திக் கலம் பகம். தொன்மையவாயது இக்கலம்பக மாகையால் இலக்கணங் கூறும் பதினெட்டு உறுப்புக்களையும் இதன்கண் காண்டல் அரிது. காலச் சுழற்சியில் உறுப்புக்கள் பெருகி நின்றன போலும். இக்கலம்பகத்தை யொட்டி எத்தனையோ கலம்பகங்கள் எழுந்தன. அவற்றைப் பட்டியல் கொண்டு தெளிக. இனிக் கலம்பகக் கருத்துரையும் கனிவும் காண்பாம்.

வில் எடுத்த வேந்தனுல் கல் எடுத்த காவலர்!

புலவர், பனசை, திரு. சு. சடையப்பன் அவர்கள்
தமிழாசிரியர், கழகப் பெரும்பள்ளி, பெருந்துறை.

1. குட்டுவன் சேரன் குளிர்தமிழ் வஞ்சிக்கண்
கோமனையில் ஓர்நாள் கோப்பெருந் தேவியாம்
மட்டுவார் குழலியுடன் மகிழ்ந்திருக்கும் வேளையில்
மாமுனிவர் சிலர்வந்தார் மாருத சீற்றத்தில்.

2. வந்த முனிவர்கள் வாய்பேச லின்றி
வாட்டத்தில் நிற்பதனைக் கண்டான் வேந்தன்;
நொந்த முகமேனே நோற்கும் நுங்கட்கு?
நீவிருறும் நோவென்ன? நவில்வீர்! என்றுன்.

3. கரையில்லாத் துயர்வாட்டக் கடிதின் வந்த
காவியுடைத் துறவியர்கள் பல்லோ ருள்ளும்
நரையான ஓர்முனிவர் நவில வந்து
நாநடுங்க மெய்ந்நடுங்கக் கூற லுற்றுர்.

4. குடநாட்டு முனிவரரில் குறித்த சில்லோர்
கூடினேம் கோயில்கள் காண வேண்டி;
வடநாட்டுச் செலவின்கண் வாழ்ந்த காலை
வடிவழகி ஒருத்தியின் மணமும் கண்டோம்.

5. மன்னவர்கள் சிலரங்கே மன்றல் காண
மகிழ்ச்சியுடன் இருக்கின்ற போழ்தத் தங்கே
கன்னல்நேர் தென்னகத்து மன்னர் தம்மைக்
கயவர்சிலர் கடுமொழியால் தாக்கும் ஓசை

6. காதினிலே மோதுறவே கடிதிற் கண்டோம்
கனகனென்ற வேந்தனுடன் விசயன் நின்றுன்
பேதமையால் புல்லியர்கள் புகன்ற வற்றைப்
பேசுகிறேன் பொறுமையுடன் கேளாய்! நீயும்.

7. எமையொத்த மன்னர்கள் இல்லாத அன்று
எளிதாகத் தென்னுட்டின் மன்னர் வென்று
இமையத்தின் சிமயத்தில் ஏறி நின்று
இசையோங்கக் குறிதன்னை இட்டார் நன்று!

8. இப்போது வந்திட்டால் என்செய்வர் ஒட்டார்?
இமைப்போதில் என்வாட்கு இரையாக்கப் பட்டார்!
எப்பாரின் வேந்தரும் எதிர்க்கவே கூடி
எதிரிலே வந்தாலும் ஒளிவெமோ ஓடி?

9. என்றிட்ட சொல்தன்னை இயம்பப் பொருது
இங்குற்ருேம் மன்னவா! என்செய்ய யாங்கள்?
கொன்றன்ன இச்சொல்லே குலமுழுது நிற்கும்
கொற்றவா! இதற்கேயாம் நினைக்காண லுற்ருேம்.

10. நீட்டிய ஈட்டி திடுமென மாட்டி
தீமையைக் காட்டி வாட்டிய தேயொப்ப
கேட்டினை யுணரார் கெடுமொழி தன்னைக்
கேட்டிட லுஞ்சேரன் முட்டிய தீயானுன்!

11. நீட்டிய நாவினர் நெடும்புறங் காட்டிட
நீள்புகழ் நாட்டித் தமிழ்மறங் காட்டி
நாட்டினர் வியப்ப நண்ணுர் ஒட்டி
நந்தமிழ்ச் சீரைக் கூட்டிட வெழுந்தானே!

12. சீறி யெழுந்த செம்மல்முன் வந்து
சேர ரென்ரு செறுநர் இகழ்ந்தார்?
ஆறுக சீற்றம்! ஆர்வேம்பார்க் கம்மாற்றம்!!
அடைவ தேன்நீ கூற்றத்தின் தோற்றம்?

13. ஆசான் அறைந்தவிவ் வமைதிசொற் கேளாது
    அருங்கணி கூறுநல் லமயத்தைக் கேட்டான்;
வீசுவாட் டாஃன வில்லவன் கோதையுடன்
    வட்கார் உட்குறவே வானவன் போனுனே!

14. உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்
    சித்திரன் முதலிய சிறப்புடை யோர்கள்
கத்து மிகவுடைய கனக விசயரின்
    தலைமையிற் கூடித் தருக்கினர் பேடி!

15. 'சின்னெறும்பு பலகூடிச் செறிகடலை யுண்டிடவே
    சிந்தனை செய்து சீறி யெழல்போலத்'
தென்னகத் தாராற்றல் தெரிவோம் யாமென்றே
    தெவ்வர்கள் கூடித் திரண்டார்ப் பரித்தாரே!

16. 'இரைவேட்ட பெரும்புலிபோல்' எழுந்த சேரன்
    எதிர்த்தோர்கள் யாவரையும் விண்ணுக் கேற்றிக்
கரையில்லாத் தானையுடன் கடிதின் வந்த
    கனகரையும் விசயரையும் கையிற் பற்றி

17. எத்திசையும் புகழ்மணக்க எதிரில் வைய
    எழிற்கற்புக் கண்ணகி''ின் படிமஞ் செய்ய
இத்தரையில் தமிழர்மேல் இழிந்த சொல்லை
    இயம்பியவர் மேலேற்றி வந்தான் கல்லை!

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 13. இதழ் 5-ன் தொடர்ச்சி]

I

SAMBANDAR

(Tamil: TIRU JNANA SAMBANDAMURTI SWAMI)

19. பைங்கோட்டுமலர்ப்புன்னைப்பறவைகாள்பயப்பூரச்
சங்காட்டந்தவிர்த்தென்னைத்தவிராநோய்தந்தானே
செங்காட்டங்குடிமேயசிறுத்தொண்டன்பணிசெய்ய
வெங்காட்டுள்ளனலேந்திவிளையாடும்பெருமானே.

The "Little Servant of God" mentioned in the next verse is one of the 63 canonized Saints of Saivism. According to the collection of legends known as the Periya Puranam, which is a Tamil Saivite classic, he fought at the battle of Vadapi, the modern Badami which took place in 642 A. D. There are other indications which strengthen the view that these hymns date from the seventh century A. D.

In the first three lines of the verse Siva is conceived as a lover, and the devotee as the woman whom He loves. In India the pain of absence from a lover is supposed to cause spots to appear on the skin of the woman who loves.

19. Birds in the flowering green-branched punnai tree,
Love writeth clear its marks on me, for He
Who cured my grief, yet left unending pain,
Senkattankudi is His holy fane,

And there His "Little Servant" dwells, who now
And ever doth before Lord Siva bow.
There in the burning-ground, with fire in hand,
Sporteth unceasingly our Master grand.

(To be Continued)

Reproduced with the kind permission of Oxford University Press. Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

தமிழிலக்கியமும் சமயதத்துவமும்

திரு. இரா. நடராசன் அவர்கள் எம். ஏ., எம். லிட்.,
புது தில்லி – 5

[மலர் 13. இதழ் 5-ன் தொடர்ச்சி]

சிவஞானபோதம்: பொய்கண்டகன்ற மெய்கண்ட தேவர் நாயனுர் தமது சிவஞான போதத்தில் பன்னிரண்டு குறுகிய சூத்திரங்களில் 'சிறிய அடியில் பெரிய மால்வரைப் பொருள் செறித்ததைப்' போன்று சைவசமய தத்துவங்களை எல்லாம் விளக்கியருளியிருக்கின்ருர். இவ்வாறு சுருக்கிக் கூறிய திலேயே சிறந்த உவமைகளைக் கூறித் தத்துவங்களை விளக்கி யுள்ளார். இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய் அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்கின்ற நமது சிந்தை களைத் தெளிவித்து சிவமாக்கி நம்மை' ஆட்கொள்கின்ருன் ஆண்டவன் என்ற கருத்தைப் பின்வருமாறு சிவஞானபோதம் எட்டாவது சூத்திரத்தில் உருவகித்து உரைத்துள்ளார். மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய ஐம்புல வேடர்களால் வளர்க் கப்பட்ட உயிராகிய பிள்ளையை, இறைவனுகிய அரசன் வந்து விடுவித்து தன்னுடன் சேர்த்துக் கொள்கின்ருன். எவ்வாறு அரசன் வந்து உண்மையை உணர்த்தும்வரை பிள்ளையானவன் தன்னை வேடன் என்றே நினைத்துக் கொண்டு அவர்கள் வயமே நடந்தானே அதே போன்று ஆன்மாவும் இறைவன் வந்து அருளும்வரை இந்திரிய வயமே இயங்குகின்றது. எவ்வாறு பின்னர் பிள்ளையானவன் வேடர்களை விடுத்து அரசனைச் சார்கின்ருனே, அதே போன்று ஆன்மாவின் இந்திரிய நுகர் வுகள் விலகிவிட ஆன்மா சிவமயமாகின்றது.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே."

சிவஞான சித்தியார்:- சிவஞானசித்தியார் சுபக்கத்தில் அருணந்தி சிவாச்சாரியார், 'இறைவன் உயிர்கள் செய்கின்ற பாவத்திற்குத் தக்க தண்டனைகளை அளித்து அவைகளைத் திருத்தி ஆட்கொள்கின்ருன்' என்ற கருத்தைச் சிறந்த உவமைகள் வாயிலாக விளக்கியுள்ளார். கருணையே வடிவான இறைவன் உயிர்களைத் தண்டித்துத் திருத்துவது பொருந்தும் என்பதைத் தக்க சான்றுகளுடன் தெரிவித்துள்ளார். இதனை மறக்கருணை என்று பெரியோர் பகர்வர். எவ்வாறு தந்தை தன் சொல் கேளாதமகனைத் வளாரினல் அடித்து, தீயபந்தமும் இட்டுத் திருத்துகின்ருனே, அதே போன்று இறைவனும் தன் மக்களாகிய உயிர்களைத் தண்டித்துத் திருத்துகின்ருன். மருத்துவன் நோயாளிகளுக்கு 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி' உரிய மருந்தை அளித்துக் குணப்படுத்துவது போன்று இறைவனும் தக்க தண்டனையை அளித்து உயிர்களைத் திருத்துகின்ருன்.. அரசன் தன் ஆணையில் நில்லாதவர்களை சிறையில் அடைத்துத் திருத்துவது போன்று, இறைவனும் உயிர்களை நரகமாகிய சிறையில் அடைத்துத் திருத்துகின்ருன். எனவே இறைவன் செயல்கள் அனைத்தும் அருள் காரணமாகவே நிகழ்கின்றன என்பது தெற்றெனத் தெரிகின்றதல்லவா?

"தந்தைதாய் பெற்ற தத்தம்
　　புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின்உ றுக்கி
　　வளாரினல் அடித்துத் தீய
பந்தமும் இடுவர் எல்லாம்
　　பார்த்திடில் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை அன்றே
　　ஈசனர் முனிவும் என்றும்."

"மறைகளீசன்சொல் அச்சொல்
　　வழிவாரா உயிரை வைக்கும்
சிறைகள்மா நிரயம் இட்ட
　　பணிசெய்வோர் செல்வத் தோடும்
உறையுமா பதிகள் உம்பர்
　　உலகங்கள் யோனிக் கெல்லாம்

இறைவனு ணேயினுல் இன்பத்
துன்பங்கள் இயைவ தாகும்.''

"அருளினுல் உரைத்த நூலின்
வழிவரா ததன்மம் செய்யின்
இருளுலாம் நிரயத்துன்பத்
திட்டிரும் பாவம் தீர்ப்பன்
பொருளுலாம் சுவர்க்கம் ஆதி
போகத்தால் புணியம் தீர்ப்பன்
மருளுலாம் மலங்கள் தீர்க்கும்
மருந்திவை வயித்திய நாதன்.''

கைவல்ய நவநீதத்தில், ஆன்மா பிறப்பு, இறப்பு போன்ற துன்பங்களில் சிக்கிச் சுழல்கின்றது என்பதற்கு, சுழல் காற்றினுல் அலேக்கப்படும் தூசியை உவமை கூறியுள்ள திறம் போற்றத் தக்கது:

"வாராய் என்மகனே தன்னே மறந்தவன் பிறந்திறந்து
தீராத சுழற்காற் றுற்ற செத்தைபோல் சுற்றிச்சுற்றி
பேராத காலநேமி பிரமையில் திரிவன் போதம்
ஆராயும் தன்னேத் தானென்றறி யும்மவ் வளவுந்தானே.''

தாயுமானவர் பாடல்களில் தத்துவக் கருத்துக்கள் நிரம்பியிருப்பதை நாம் அறிவோம். சங்கரனே அடையும் நன்மார்க்கங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம், ஆகிய நான்கும் இறைவனே அடைவதற்குரிய பல்வேறு படிகள் என்பதை, அனேவரும் அறிந்த அரும்பு, மலர், காய், கனிகளேக் கொண்டு விளக்கியருளியிருப்பது வியத்தற்கு உரியதல்லவா?

"விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோன் றன்றோ பராபரமே''.

இராமலிங்க அடிகளார் உயிர்களே அடுத்த கடுந்துயர் அச்சமாதிகளே இறைவன் அருளால் போக்க விழைந்த கருணேயாளர். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் தாமும் வாடிய பெருந்தகை. எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணி வாழ்ந்த

பெரியார். ஆன்மநேய ஒருமைப்பாடு கண்ட உத்தமர். பிற உயிர்களையும் நாம் நம்மை எவ்வாறு நேசிக்கின்றோமோ அவ்வாறு நேசிக்க வேண்டும் என்று எத்துணை அழகாகப் பின் வரும் பாடலில் விளக்கியுள்ளார்!

"எத்துணையும் பேதமுறு தெவ்வுயிரும் தம்முயிர்
போலெண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர்
அவர்உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமென
நான்தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் செய்யஎன் சிந்தைமிக
விழைந்த தாலோ."

சுவாமி விவேகானந்தரும், "நாம் வணங்க வேண்டிய கடவுள் உடலின் உள்ளே உள்ள உயிரே" என்று இயம்பியுள்ளார். (The only God to worship is the human Soul in the human body.)

திருமலை நாயக்கனாகிய கொற்றவன் தொழுதேத்திய குமர குருபரர், உமையவள் உலகத்தை அடிக்கடி ஆக்குதலும், அவற்றைச் சிவபெருமான் அழித்தலுமாகிய செய்கைகளை, சிறுமியர் சிற்றிலிழைத்தலும் சிறுவர்-அதனை அழித்தலுமாகியசெயல்களாக உருவகித்துத் திறம்பட விளக்கியுள்ளார். இத்தகைய இறைவனின் அலகிலா விளையாட்டைத்தான் மாணிக்கவாசகரும் தமது திருவெம்பாவையில் "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி' என்று பாராட்டியுள்ளார்.

"சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய எட்டுச்
சுவர்க்கால் நிறுத்திமேருத்
தூணென்று நடுநட்டு வெளிமுகடு முடியிரு
சுடர்விளக் கிட்டுமுற்ற
எற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கலம்
எடுதடுக் கிப்புதுக்கூழ்
இன்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை
இழைத்திட அழித்தழித்தோர்

முற்றவெளி யிற்றிரியும் மத்தப் பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவும்
முனியாது வைகலும் எடுத்தடுக் கிப்பெரிய
முதண்ட கூடமுடும்
சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்னற்கும் அம்பொன்மலை மன்னற்கும் ஒருசெல்வி
செங்கீரை யாடியருளே."

சிவப்பிரகாசர், அருணகிரிநாதர் பாடல்களிலும் பல தத்துவக் கருத்துக்கள் பொதிந்திருப்பதை நாம் அறிவோம்.

இருபதாம் நூற்றுண்டு இலக்கியங்களில் காணப்படும் தத்துவக் கருத்துக்களுக்குக் குறைவேயில்லை. சிறந்த தத்துவப் பேராசிரியராகிய பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் தமது மனோன்மணீயத்தில் தத்துவக் கருத்துக்களை அமைத்து இருப்பதில் வியப்பே இல்லை அல்லவா? மனோன்மணீய நாடகம் முழுவதற்குமே நாம் தத்துவப் பொருள் காணமுடியும். நிஷ்டாபரர், கருணாகரர் வாதங்களில் தத்துவக் கருத்துக்கள் பல மிளிர்கின்றன. சிவகாமியின் சரிதத்தில் சிவகாமியை உயிராகவும், சிதம்பரனை இறைவனாகவும் தத்துவப் பொருள் காணவேண்டும். ஆணவத்தோடு அத்துவிதமாயிருந்த ஆன்மா மெய்ஞ்ஞானத் தாணுவாகிய ஆண்டானுடன் ஒன்று சேர்கின்ற நிலையை, சிவகாமியும் சிதம்பரனும் சேர்கின்ற நிலையில் தத்துவப்பொருள் காணுமாறு அமைத்துப் பாடியிருப்பது கற்றோரால் போற்றப்படும் பெற்றி பெற்றது.

"சிவகாமி யானுனது சிதம்பரனே என்னச்
செப்புமுனம் இருவரு மற்றோருவ மானார்
எவர்தாமுன் னணைந்தாரென் றிதுகாறும் அறியோம்
இருவருமொன் ருயினரென்றே அறையும் சுருதி."

பாட்டுக்கொரு புலவன் பாரதியாரும் தம்முடைய பாக்களில் பல தத்துவங்களைத் தந்துள்ளார். அவர் கண்ணனை ஆண்டானாகவும், சேவகனாகவும், காதலனாகவும், காதலியாகவும், குழந்தையாகவும் பல்வேறு வகைகளில் பாடியிருப்பதி

லுள்ள தத்துவங்களை யாரே எளிதில் விளக்க முடியும்? 'கண்ணன் என் சேவகனில்' இறைவனுக்கு அன்புதான் தேவை என்பதை எத்துணை அழகாக அறிவித்துள்ளார்!

"ஆன வயதிற்கோ அளவில்லை தேவரீர்
ஆதரித்தால் போதுமிவ் வடியேனை நெஞ்சிலுள்ள
காதல்பெரி தெனக்குக் காசுபெரி தில்லையென்றான்"

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும்,

"உண்மை அன்பை உடையவரே
உலகை அளந்த பெருமானை
அண்மை யாகக் கண்டிடுவர்
அல்லார் காணார் காணாரே"

என்று உரைத்துள்ளார்.

இவ்வாறு நம் தமிழ் இலக்கியங்களில் இணைந்துள்ள தத்துவக் கருத்துக்களைக் கூறிக்கொண்டே போனால் மிகவும் விரியும். சமய தத்துவங்கள் இலக்கிய நயத்துடன் இணைந்த தனால் பொன்மலர் நாற்றம் பெற்றது போன்று மிளிர்கின்றன. நம் பெரியவர்கள் சமய தத்துவங்களாகிய மாணிக்கங்களை இலக்கிய இன்பமாகிய பொற் பேழைகளில் வைத்து நமக்குத் தந்திருக்கின்றார்கள். ஒரே கல்லில் இரு மாங்காய் வீழ்த்துவது போன்று, தமிழ் இலக்கியங்களைப் படிப்பதால் இன்பமும் பெற லாம்; அறவுரைகளை அறிந்து திருந்தவும் செய்யலாம். இன்ப இலக்கியம் (Pure Literature) பயன் இலக்கியம் (Applied Literature) என்று மேனாட்டினர் சிலர் வரையறுப்பதுபோல் அன்றி, நம் தமிழிலக்கியங்கள் இன்பத்தையும் பயனையும் ஒருங்கே தருகின்றன என்பது வெள்ளிடைமலை. எனவே இலக் கியங்களைப் படித்து இன்பம் துய்ப்பதுடன், அவைகள் விளக்கு கின்ற தத்துவங்களை உணர்ந்து, அவைகள் காட்டுகின்ற அற வழியில் நடப்பது நமது தலையாய கடமையாகும்.

———

பாட்டியல்

மதுரகவி மரபினர்,
திரு. T. N. N. கவிக்குஞ்சரப் பாவலர் அவர்கள்,
மெயின்ரோடு, வாளாடி P. O. திருச்சிராப்பள்ளி.

[மலர் 13. இதழ் 5-ன் தொடர்ச்சி]

கதிப்பொருத்தம். 3

முன்னர் உண்டிப் பொருத்தத்தின்கண் தேர்ந்தெடுத்த அமுத எழுத்துக்களைக் கொண்டே கதிப்பொருத்தம் காண வேண்டியிருத்தலான் 3வது கதிப்பொருத்தம் கூறலுற்றும்.

பாட்டியலார் முதலெழுத்துக்கள் முப்பதுடன் ஆய்த எழுத்தையும் சேர்த்து நான்கு கதிகளாக வகைப்படுத்தினர்.

அக்கதிகள் வருமாறு :-

(நான்குவகைக்கதிகள்)

வானவர் மக்கள் நரகர் விலங்கென
ஊனமில் கதியே ஒருநான் காகும். —பன்னிருபாட்டியல்

(இ. பொ.) அவ்வெழுத்துக்கள் வானவர்கதி, மக்கள் கதி, விலங்கின்கதி, நரகர்கதி என நான்கு வகைப்படும்.

'கதி' என்பது நிலையெனப் பொருளாம்.

மேற்கோள் :

கதியெனப் படுபவை காண்டக விரிப்பின்
தேவர் மக்கள் நரகர் விலங்கென
மேவிய கதிகள் ஈரிரண் டாகும். —இந்திரகாளியார்

தேவர் மக்கள் நரகர் விலங்கென
மேவிய நான்கே எழுத்தியல் கதியே. —பரணர்

(வானவர் கதிக்குரிய எழுத்துக்கள்)

அவற்றுள்,

உயிர்க்குறில் வல்லினம் ஈற்றெழுத் தொழியப்
பயிர்ப்புறு வானவர் கதியெனப் படுமே. —பன்னிரு பாட்டியல்

(இ-பொ) உயிர்க்குறிலின் ஈற்றெழுத்தாகிய ஒகரம் ஒழிய நின்ற நான்கெழுத்துக்களும், வல்லினத்தின் ஈருகிய றகரம் ஒழிய நின்ற ஐந்தெழுத்துக்களும், வானவர்கதியாம்.

அவ்வெழுத்துக்கள் வருமாறு:-

அ. இ. உ. எ. க். ச். ட். த். ப்.

எல்லாராலும் சிறப்பிக்கப்படும் வானவர் போல இவைகளும் முதலெழுத்துக்களுட் சிறந்து விளங்கும் தன்மைபற்றி வானவர் கதியென வைத்தனர் எனக் கோடல் பொருந்தும்.

(மக்கள் கதிக்குரிய எழுத்துக்கள்)

மக்கட் கதியே நெட்டுயிர் நான்கொடு
மிக்க சிறப்பின ங ஞ ண நமவே. —பன்னிரு பாட்டியல்

(இ-பொ) மிக்க சிறப்பினவாகிய நெட்டுயிரில் நான்கெழுத்துக்களும், ங், ஞ், ண், ந், ம், என்னும் மெல்லின ஒற்றுக்கள் ஐந்தும் ஆக ஒன்பதெழுத்துக்களும் மக்கள் கதியாம்.

அவைகள் வருமாறு:-

ஆ. ஈ. ஊ. ஏ. ங். ஞ். ண். ந். ம்.

வானவர்கட்கு மேலாகமிக்க சிறப்புடன் விளங்கும் மக்கள் போல இவ்வெழுத்துக்களும் உள்ளதால் இவைகளை மக்கள் கதியென அமைத்தனர் என்ப.

நெட்டுயிர் நான்கும் குறிலினது விகாரமே யாகலானும், மெல்லின ஒற்றுக்களுள் ங், ஞ், ண், ந், ம், என்னும் இவ்

வைந்தும் மென்மையான இனிய ஓசையுடன் விளங்குதலினானும், இவ்வெழுத்துக்களைத் தேவர் நிலைக்கு அடுத்த நிலையாகிய மக்கள் கதியென்றார் எனினும் பொருந்தும்.

மேற்கோள்:

வேண்டும் குறில்வன்மை ஈறொழித்தால் விண்ணோர்க்காம்
ஆண்ட நெடின்முதனுன் கந்தமொழித்–தீண்டிய
மென்மையா மக்கட் கிவையிரண்டு மெய்க்கதிக்கு
நன்மையா முன்மொழிக்கு நாட்டு. –வெண்பாப் பாட்டியல்

(விலங்கின் கதிக்குரிய எழுத்துக்கள்)

ஒ ஓ இரண்டும் யரல றழவெனத்
தொக்கன ஐந்தும் விலங்கின் கதியே. —பன்னிரு பாட்டியல்

(இ-பொ) ஒ. ஓ. என்னும் இரண்டுயிரெழுத்துக்களும், ய், ர், ல், ற், ழ் என்னும்ஒற்றுக்கள் ஐந்தும் விலங்கின் கதியாம்.

ஒகர ஓகாரங்களை முன்னர் மொழிந்த தேவர்கதியினும், மக்கள் கதியினும் சாராது தடைசெய்திருத்தலினானும், ய். ர். ல். ற். ழ். என்னும் இவ்வொற்றுக்கள் ஐந்தனுள் யகரம் நீங்கிய ஏனைய நான்கும் மொழிக்கு முன்வர தண்டமிழ் இலக்கணம் இடங்கொடாமையானும், எழுத்திலக்கணப்படி யகரம் மொழிக்கு முன்வர உரிமை பெற்றிருக்கினும், அஃது நச்செழுத்துக்களுள் ஒன்றாய் இருத்தலான் பாட்டியல் உண்டிப் பொருத்தம் அவ்வெழுத்தை முதன்மொழிக்கு முன்வரல் ஆகாது என அறைதலானும், அவ்வெழுத்துக்களைத் தடைசெய்த நிலைக்குரிய எழுத்துக்கள் எனக்கொண்டு விலங்கின் கதியென்றார்.

துட்டமிருகத்தைப் போல இவ்வெழுத்துக்களும் முதன்மொழியின் முன்நின்றால் பாட்டுடைத் தலைவனுக்குத் தீமை பயக்கும் தன்மை உடைத்தாய் இருத்தலான் இவைகளை விலங்கின் கதியென்றார் எனினும் அமையும்.

விலங்கு–தடை, தளை, மிருகம்.

(நரகர்கதிக்குரிய எழுத்துக்கள்)

ஒழிந்தன ஐ ஔ ஆய்த எழுத்தும்
கழிந்தன வ ள னவும் நரகர் கதியே, —பன்னிருபாட்டியல்

(இ. - பொ.) மேற்கூறிய மூன்றுகதிகளிலும் உள்ள உயிர் எழுத்துக்களுடன் சேராது ஒழிந்தனவாகிய ஐகார ஔகாரங் களும், ஆய்த எழுத்தும், (அம்முக்கதிகளிலும் உள்ள ஒற்றுக் களுடன் சாராது) கழிந்தனவாகிய வ். ள். ன். என்னும் மூன்று ஒற்றுக்களும் நரகர்கதியாம்.

மேற்கோள்:

நாட்டிய ஒஓ யரலழ நல்வன்மைக்
கீட்டிய வந்த மிவைவிலங்காக்—காட்டா
தொழிந்த நரகர்க்கென் றேதிரு ரின்ன
வெழுத்தாகா வாதி யிடை. —வெண்பாப்பாட்டியல்

“ மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை”

என நன்னூலார் நரகர்என்பாரை உயர்திணையாய்உரைத்திருக்க ஈண்டு நரகர்கதியைப் (நரகர்கதிக்குரிய எழுத்துக்களை) பொருந்தாது எனப் புகன்றதென்னை? யெனின், காட்டுதும்.

நரகர் என்பவர் கீழுலகத்துவாழும் பாவிகள். அவர்கள் ஒழுக்கம் விழுப்பந்தரும் என்பதை உணராமல் பழிபாவங்கட்கு அஞ்சாது அறந்தவறித் தீமை புரிவதையே தம் கடமையெனக் கொண்டதால் நரகத்தில் வாழ்ந்து நலிகின்றனர். அக் காரணத்தால் அவர்கள் நரகர் எனப்பட்டனர்.

ஆகையான் அவர் கதியையும், விலங்கின் கதியோடு ஒப்பவைத்துப் பொருந்தாது எனப் புகன்றார்.

உயர்திணைக்குரியாராய் இருக்கினும், இலங்கு நூல் இயம் பும் ஒழுக்கம் கல்லாதார் அஃறிணையாகிய விலங்கொடு ஒப்பாம் எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவப் பெருந்தகையார் திருவாய் மலர்ந்தருளியதையும் ஈண்டு நோக்கித் தெளிக.

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். —திருக்குறள்

மற்றும், திருக்குறளின் வழி நூலாகிய இளைஞர் குறள் கூற்றையும் காண்க.

துட்ட மிருக மனையார் பெரும்பனுவல்
கற்றும் கருணை யிலர். —இளைஞர் குறள்

முதற்சீரின்கண் வருதற்குரியகதிகளும், வரலாகாக்கதிகளும்

மன்னுவர் தேவர் மக்கள் செய்யுளுள்
மன்னார் விலங்கொடு நரகர் கதியே. —பன்னிரு பாட்டியல்

(இ.-பொ.) முதற் பாவின் (முன்மொழியின்) முன்னர் தேவர் கதிக்குரிய எழுத்துக்களும், மக்கள் கதிக்குரிய எழுத்துக்களும் பொருந்துவனவாம். விலங்கின் கதிக்குரிய எழுத்துக்களும், நரகர் கதிக்குரிய எழுத்துக்களும் பொருந்தாவாம்.

ஈண்டு தேவர் மக்கள் என்னும் இவ்விரு சொற்களும், அவரவர்கதிக்குரிய எழுத்துக்களைக் குறிக்கா நின்றன.

பிறகதிப் பெயர்களும் இங்ஙனமேயாம்.

மேற்கோள்:

விலங்கும் நரகும் விலங்கின வென்ப —இந்திரகாளியார்

நரகும் விலங்கும் வரைவ ரீண்டே
தேவரும் மக்களும் மேவின பாட்டே. —பின்னோர்

விளக்கம்:

முன் உண்டிப் பொருத்தத்தின்கண் தேர்ந்தெடுத்த அமுத எழுத்துக்களுள் தியகதிக்குரிய எழுத்தை நீக்கித் தேவர்கதி, மக்கள் கதி என்னும் இவ்விரு நற்கதிக்குரிய எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் ஞான்று மற்றொன்றும் சிந்தித்தல் வேண்டும்.

அஃதாவது:—

மக்கள் மீதுபாடும் பாவின் முன் மொழியாகிய மங்கலச் சொல்லின் முன் மெய்யொடு புணராத உயிரெழுத்து நிற்பின் குற்றமாகுமென்றும், அதனால் பாட்டுத் தலைவனுக்கு மரணத்திற்கு ஒப்பான தீங்குண்டாமென்றும், மங்கலச்சொற் பொருத்தத்தின்கண் பாட்டியலார் பகராநின்றார்.

ஆகையான் மக்கள்மீது பாடவிரும்பின் ஒற்றெடு புணர்ந்த உயிரெழுத்துக்களைத் (உயிர்மெய் யெழுத்துக்களைத்) தேர்ந்தெடுத்துக் கொள்க.

உயிர் மெய்கள் எக்கதியின் பாற்படுமெனின், இயம்புதும்.

எம்மெய்யுடன் உயிர் சார்ந்துள்ளதோ அம்மெய்க்குரிய கதியே அவ்வுயிர்மெய்க்குமாம்.

என்னை? யெனின், ஒற்றுமுன்னும் உயிர்பின்னுமாக நிற்ற லான் அங்ஙனம் அமையுமென அறிக.

உதாரணம்:

ப் + ஒ = பொ. வானவர் கதியாகிய பகர ஒற்றின்மேல் ஒகரஉயிர் ஏறத் தோன்றிய 'பொ' என்னும் எழுத்து வானவர் கதியாம்.

ம் + அ = ம. மக்கள் கதியாகிய மகர ஒற்றின்மேல் அகரஉயிர் ஏறத் தோன்றிய 'ம' என்னும் எழுத்து மக்கள் கதியாம்.

இங்கு இயம்பியவாறே ஏனைய எழுத்துக்களுக்கும் கண்டு கொள்க.

ஓதிய மெய்யொடு புணரா துயிரெழுத்து
ஆதி நிற்பி னுனந் தம்மே. —இந்திரகாளியார்

மக்களுக்குச் சூட்டும் பாமாலையின் முன்னெழுத்து உயிராக நிற்றல் ஆகாதென்பதற்குரிய காரணத்தையும் இந்திரகாளி யார் இயம்பா நின்றார்.

உடம்பு பிரிவுயிர் சாத னனே. —இந்திரகாளியார்

தேவர், ஞானியர், கடவுளர் ஆகிய இவர்கள்மீது புனையும் பாமாலை முன்னர் உயிரெழுத்து நிற்கின் குற்றமில்லையாம்.

இனிப் பாற்பொருத்தம் பகர்வாம்.

(வளரும்)

1137-ம௵, மாசி, பங்குனி மாதங்களில்

கலைக்கோயிலில் வரப்பெற்றுக்கொண்ட புத்தகங்களின் விபரம். (தொடர்ச்சி)

தொடர் எண்	புத்தகத்தின் பெயர்	ஆசிரியரின் பெயர்
9347	பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு	சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1/140 பிராட்வே. சென்னை-1
9348	சுடர் மலர் 10 – 1961	தில்லித் தமிழ் சங்க வெளியீடு.
9349	அமர காதலர்	தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்.
9350 & 51	வேங்கட முதல் குமரிவரை	ஷை
9352 to 57	திருமந்திரக் கட்டுரை (கர்ப்பக்கிரியை) 2வது தந்திரம்	திருவாவடுதுறையாதீனம்.
9358	குழந்தைக்கு மருந்துகள்	T. S. ஜனக குமாரி, செல்வி பதிப்பகம் [காரைக்குடி.
9359	தமிழ் வைத்தியம்	ஷை
9360 to 65	திருமந்திரம் – நான்காம் தந்திரம்	திருவாவடுதுறையாதீனம்.
9366 to 75	திருவெம்பாவை – திருப்பள்ளியெழுச்சி திருப்பாவை – வெளியீடு எண் 157	ஷை
9376 to 84	கோளறு திருப்பதிகம் ஷை 158	ஷை
9385 to 9402	திருவெம்பாவை – திருப்பள்ளியெழுச்சி– திருப்பாவை வெளியீடு எண் 509	தருமையாதீனம்.

9403	துன்ப நீக்கம் அருளும் பாராயணத் திருமுறை	தருமையாதீனம்.
9404 & 5	திருமுறை அர்ச்சனை	ஷை
9406 & 7	இடர்களையும் திருப்பதிகமும், கோளறு திருப் பதிகமும்	திருக்குடந்தை சிவனடியார் திருக்கூட்டம் குடந்தை.
9408 to 13	திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி (பொழிப்புரையுடன்)	திருப்பனந்தாள் – ஸ்ரீ காசிமடம்.
9414	திருவலிதாயம் திருப்பதிகம் வெளியீடு எண் 507	தருமபுர ஆதீனம்.
9415	திருஓத்தூர் திருப்பதிகம் ஷை 505	ஷை
9416	திருவேற்காட்டுத் திருப்பதிகம் ஷை 506	ஷை
9417	திருக்கள்ளில் திருப்பதிகம் ஷை 509	ஷை
9418 to 20	திருவெம்பாவை – திருப்பள்ளியெழுச்சி (குறிப்-புரையுடன்)	திருப்பனந்தாள் – ஸ்ரீ காசிமடம்.
9421	அதிவீர ராமபாண்டியர் இயற்றிய கூர்ம புராண மூலம். பூர்வகாண்டம்	பதித்தவர் பண்டித வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமி, சரஸ்வதி மகால் நூல் நிலையத் தமிழ் ஆராய்ச்சியாளர்.
9422	ஸ்ரீமத் கம்பராமாயணம் (கிட்கிந்தா காண்டம்)	டாக்டர் உ. வே. சா. நூல்நிலையம், அடையாறு, சென்னை-20.
9423 to 32	ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த சிவபோகசாரம் (மூலமும், ஆங்கிலமும்) தமிழ் குறிப்புரையுடன்	திருப்பனந்தாள் – ஸ்ரீ காசிமடம்.
9433	ஸ்ரீமத் கம்பராமாயணம், பாலகாண்டம்	நமச்சிவாய முதலியார்.

(தொடரும்)

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

எண்	வெளியீடு		ரூ.	ந. பை
1	விநாயகர் திருமுறை	...	0	06
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு			
	டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3	50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3	00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம்மட்டும்)			
	(புதிய பதிப்பு)	...	2	75
5*	திருநாவுக்கரசர் தேவாரம்	...	2	00
6*	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ..	...	1	30
7*	திருவாசகம் ,,	...	0	56
8*	திருக்கோவையார்-பேராசிரியர் உரையும் பழையவுரையும்			
	(புதிய பதிப்பு)	...	2	90
9	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பாவும்			
	திருப்பல்லாண்டும் (மூலம்மட்டும்)	...	0	56
10*	திருமந்திரம் .. (புதிய பதிப்பு)	...	2	25
11	பதினோராந்திருமுறை .. (அச்சில்)			
12	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0	25
13	திருக்கைலாயஞானவுலா - உரையுடன்	...	0	50
14	பெரிய புராணம் (மூலம்மட்டும்)	...	2	50
15*	அகத்தியர் தேவாரத்திரட்டு	...	0	37
16	திருவிளையாடற் புராணம் (மூலம்மட்டும்)	...	3	00
17	தாயுமான சுவாமிகள் பாடல்-குறிப்புரையுடன் (அச்சில்)	...		
18	கந்தபுராணச் சுருக்கம் (மூலம்மட்டும்)	...	1	75
19	கந்தபுராணம் – முதல் மூன்று காண்டங்கள் ..	...	2	75
20	.. யுத்த தேவகாண்டம் ..	...	2	00
21	.. தக்ஷகாண்டம் ..	...	1	50
22	கந்தபுராண வசனம் (அச்சில்)			
23	கந்தர் அலங்காரம் - குறிப்புரையுடன்	...	0	25
24	கந்தரனுபூதி	...	0	13
25	கந்தர் கலிவெண்பா – ஆங்கிலம் ஹிந்தி			
	மொழி பெயர்ப்புக்களுடன்	...	0	37
26	கந்தர் கலிவெண்பா - மூலம் மட்டும்	...	0	06
27	கந்தர் கலிவெண்பா - மூலமும் – உரையும்	...	0	37
28	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0	50
29	சகலகலாவல்லிமாலை – ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது	...	0	06
30	சிவஞான சித்தியார், ஹிந்தி மட்டும்	...	1	00
31	திருக்குறள் - அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும்			
	ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1	50
32	திருக்குறள் - பொருட்பால் ..	...	2	50
33	திருக்குறள் - காமத்துப்பால் ..	...	1	00
	இவை 31, 32, 33 திருக்குறள் 3 புத்தகமும்	...	4	00

Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574 குமரகுருபரன்.

34	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
35	திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13
36	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
37	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
38	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை- மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2 75
39	திருவாரூர் நான்மணிமாலை – முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்	...	1 25
40	சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட்கோவை- தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
41	பண்டார மும்மணிக் கோவை – காசிக் கலம்பகம் – சகலகலாவல்லி மாலை	...	1 00
42	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
43	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
44	தமிழிசைப்பாக்கள் [அச்சில்]		
45	பெரியபுராணம் – உரைநடை	...	2 00
46	திருவிளையாடற் புராணம் – உரைநடை	...	2 25
47	குமரகுருபர சுவாமிகள் ஜீவிய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 50
48	அபிராமி பட்டர் பிரபந்தம் (மூலம்மட்டும்) (அச்சில்)	...	
49	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	...	0 13
52	திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
53	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
54	ஷை ஷை காமத்துப்பால் ஷை	...	1 20
55	அபிராமி அந்தாதி – தெளிவுரையுடன்	...	0 50
56	மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்)	...	0 50

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
"தியாகராஜ விலாசம்" 53, பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

குறிப்பு:- * இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் – '62